அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 23 - அரசியல் விஞ்ஞானம்
## பழைய பாடத்திட்டம்
## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## கட்டாய கவனத்திற்கு

இந்த புள்ளியிடும் திட்டத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விடைகள் பரீட்சகர்களுக்கு வழிகாட்டுவதற்காக மட்டுமே ஆகும். பரீட்சார்த்திகள் மாதிரி விடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் தமது விடைகளில் உள்ளடக்காமல் இருக்கலாம். எனினும் எழுதப்பட்டுள்ள விடைகளை மதிப்பீடு செய்யும் போது மாதிரி விடைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இசைவானவை எனத் தென்படுமாயின் பொருத்தமான புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Department of Examinations

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை – 2020
## 23 – அரசியல் விஞ்ஞானம் (பழைய பாடத்திட்டம்)
## புள்ளி வழங்கல் திட்டம்

**வினாப்பத்திரம் I**

நேரம் : 02 மணித்தியாலங்கள்

தெரிவுகள் 5 இனைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 50 ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவிற்கு 01 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 புள்ளிகள் ஆகும்.

**வினாப்பத்திரம் II**

நேரம் : 03 மணித்தியாலயங்கள்

இது மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி A – குறு விடை வழங்கத்தக்க 20 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 01 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகள் ஆகும்.

பகுதி B – கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 04 காணப்படும். 02 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

பகுதி C – கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 04 காணப்படும். 02 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**இறுதி புள்ளிகளைக் கணித்தல்**

| | |
|---|---|
| வினாப்பத்திரம் I | = 50 |
| வினாப்பத்திரம் II | = 100 |

இறுதிப் புள்ளி = 50 + 100/2 = 100

Department of Examinations

**பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்கள் :**

2020ம் ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையின் அரசியல் விஞ்ஞான பாடத்துக்கான பகுதிI மற்றும் II ஆகிய விடைத்தாள் மதீப்பீட்டுக்காக பரீட்சகர்கள் சபை தயாரித்த மாதிரி விடைகளே இந்நூலில காணப்படுகின்றது. விடைத்தாள்களை திருத்துவதற்கான வழிகாட்டலை இது வழங்குகின்றது.

கேட்கப்பட்ட வினாக்களுக்கான பொருத்தமான அடிப்படை விடயங்களை, தகவல்களை மற்றும் கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய வகையிலேயே பகுதிII க்கான மாதிரி விடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் மேலதிக தகவல்களை, விடயங்களை, பகுப்பாய்வினை வழங்கியிருப்பின், பரீட்சகர்கள் அதனை கவனத்தில் எடுத்து மேலதிக புள்ளிகளை வழங்கவேண்டும். பரீட்சகர்கள் புள்ளி வழங்கும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

a) பரீட்சார்த்திகள் வினாவினை சரியாக விளங்கிக் கொண்டுள்ளனரா? இதனை அறிமுகம் மற்றும் விடைக்கான பிரவேசத்தில் மதிப்பிட முடியும்.

b) பரீட்சார்த்திகள் பொருத்தமான விடயங்களை சரியாக அடையாளம் கண்டு தமது விடைகளை முறையாக ஒழுங்குப்படுத்தி முன்வைத்துள்ளனரா?

c) விடையில் உள்ளவிடயங்கள் அல்லது தகவல்கள் போதியளவு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா?

d) விடையின் முடிவில் முடிவரையொன்று காணப்படுகின்றதா மற்றும் முடிவுரை தர்க்கரீதியாக கனதியானதாக காணப்படுகின்றதா?

விடையில் பரீட்சார்த்திகள் வழங்கியுள்ள தகவல்கள் மற்றும் விடயங்களில் ஏதேனும் சந்தேகம் மற்றும் தெளிவின்மை காணப்படுமாயின், அதுகுறித்து முடிவெடுப்பதற்கு முன்னர் அவற்றை பிரதம பரீட்சகரிடம் கொண்டு செல்லவும்.

வினாப்பத்திரத்தின் முதலாம் பகுதி முழு பாடத்திட்டத்தினையும் உள்ளடக்கிய வகையில் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன், பகுதிII மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளன – அதில் A, B, C என மூன்று பகுதிகள் காணப்படுகின்றன.

பகுதிII இன் A பகுதி முழு பாடத்திட்டத்தினையும் உள்ளடக்கியவகையில் 20 குறு வினாக்களைக் கொண்டுள்ளன. B பகுதி அரசியல் விஞ்ஞானத்தின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் புரிதலை மதிப்பிடுவதாக காணப்படுகின்றது. அந்தவகையில், சில வினாக்கள் கோட்பாட்டு அறிவினையும், சில வினாக்கள் பல தெரிவுசெய்யப்பட்ட நாடுகள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவினை பரிசீலனை செய்வதாக அமைகின்றது.

C பகுதி இலங்கையில் பிரத்தானியரின் காலனித்து ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களின் விளைவுகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் புரிதலையும், அத்துடன் சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சி தொடர்பான அறிவு மற்றும் புரிதலை பரிசீலிப்பதாக அமைகின்றது. மேலும், இப்பகுதி இலங்கைக்கும் உலக சமூகத்துக்குமிடையிலான உறவின் தன்மை தொடர்பான அறிவினையும் மதிப்பிடுகின்றது.

Department of Examinations

## பகுதி II இற்கான அறிவுறுத்தல்கள்

### 1. கட்டுரைவகை வினாக்கள்

இவ்வினாக்கள் மொத்தமாக 20 புள்ளிகளைக் கொண்டவை. புள்ளிகளை வழங்குகையில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

i. அறிமுகம்/விடைக்கான பிரவேசம் – உயர்ந்தபட்சம் மூன்று புள்ளிகள்

ii. முக்கிய விடயங்கள்/கருத்துக்கள், கலந்துரையாடல் போன்றவற்றிற்கு 15 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன (ஒவ்வொரு விடயத்திற்கும் இரண்டு புள்ளிகளை வழங்கலாம்)

iii. முடிவுரைக்கான உயர்ந்தபட்ச புள்ளிகள் இரண்டாகும்

**மேற்கூறப்பட்டவாறு புள்ளிகளை வழங்குவதுடன் பின்வரும் வழிகாட்டற் குறிப்புகளையும் கருத்திற் கொள்ளவும்.**

a) **அறிமுகம்/ விடைக்கான பிரவேசம்:** இது ஒரு அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம். எவ்வாறாயினும் வினாவை வேறுவடிவத்தில் மீளஎழுதுவதாக அமையக்கூடாது. விடையின் உள்ளடக்கத்தை அறிமுகம் செய்வதாக அமைந்திருத்தல் வேண்டும். புள்ளிவழங்கும்போது தரப்பட்டுள்ள விடைக்குப் பொருத்தமான விடயங்கள் அறிமுகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து புள்ளி வழங்கவும். பலவீனமானதோர் / பொருத்தமற்றதோர் அறிமுகத்திற்கு புள்ளிகள் வழங்குவதா இல்லையா என்பதைப் பரீட்சகர்கள் தீர்மானிக்கமுடியும். நல்ல, தரமான, போதியளவு, கருத்துக்களைக் கொண்டுள்ள அறிமுகம் /விடைக்கான பிரவேசம் ஆகியவற்றைக் கொண்ட விடைக்கே முழுமையான புள்ளிகளை வழங்கப்பட முடியும்.

b) **கலந்துரையாடல்:** ஒவ்வொரு விடைக்கான முக்கிய விடயங்கள் / கருத்துக்களை புள்ளிவழங்கும் திட்டம் வழங்குகின்றது. பரீட்சகர்கள் புள்ளிவழங்கும் திட்டத்திலுள்ள விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா, போதியளவு விவரிக்கப்பட்டுள்ளதா என்பதைப் புள்ளி வழங்கும்போது சரிபார்த்தல் வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் (Points) குறிப்பிடுவது ஒருநல்ல விடையாகாது. பரீட்சார்த்திகள் தமது கலந்துரையாடலில் சுயாதீன அறிவினை மற்றும் அரசியல் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய புதிய தகவல்களை முன்வைத்திருப்பார்களாயின் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

c) **முடிவுரை:** இது வினாவை மீளஎழுதுவதன்று. ஒரு சிறந்த முடிவுரை பின்வரும் விடயங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

1. விடையில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் சரியான சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்
2. வழங்கப்பட்டுள்ள விடையின் பகுப்பாய்வு சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்
3. பரீட்சார்த்தி விடையில் முன்வைத்துள்ள பிரதான வாதங்கள் இவ்வினா பற்றிய பரீட்சார்த்தியின் சுய அவதானிப்பு / பகுப்பாய்வு வாதம் ஆகியவற்றை முன்வைக்கலாம்.
4. முடிவுரை ஒன்று அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம்.

சிலநேரங்களில் பரீட்சார்த்திகள் முடிவுரை என குறிப்பிடாமல் தமது விடையினை நிறைவு செய்திருக்க முடியும். இது குறித்து பரீட்சகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

Department of Examinations

d) **விடையின் தரம்:** புள்ளிகள் வழங்கும்போது விடையின் ஒட்டுமொத்த தரம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். புள்ளி வழங்கும்போது பரீட்சார்த்திகளின் சுயாதீன அறிவு, கருத்துக்கள் மற்றும் வாதங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பரீட்சார்த்திகள் ஒரு தரமான விடையின் மூலம் தமக்குள்ள பாடம் தொடர்பான உயர் மட்டஅறிவு, சுயாதீனஅறிவு, அத்துடன், வினா தொடர்பான தமது விவரன, மதிப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு திறன்களை வெளிப்படுத்துவர். தரமான விடைகள் பரீட்சார்த்திகளின் எழுத்தாற்றல், முன்வைப்புத் திறன், மொழியினை திறமையாகவும் சரியாகவும் வெளிப்படுத்துவதாக அமையும். தரமான விடையொன்றினை அதனுடைய அறிமுகம், விவரண மற்றும் பகுப்பாய்வு ரீதியான உள்ளடக்கம் மற்றும் முடிவுரையின் மூலம் மதிப்பிட முடியும்.

**2. பகுதியளவிலான கட்டமைப்பு வினாக்கள்**

இவ் வினாப்பத்திரத்தில் இரண்டு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் வழங்கப்பட்டுள்ள பல தெரிவுகளில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட ஒவ்வொரு வினாவும் உயர்ந்தபட்சம் 10 புள்ளிகளைக் கொண்டுள்ளன. ஆகவே மொத்தம் 20 புள்ளிகள் இப்பகுதிக்கு வழங்கப்படும்.

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட விடைகளை மதிப்பிடுகையில் பின்வரும் வழிகாட்டலைப் பின்பற்றவும்.

i. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தலைப்புக்கும் நீண்ட விடையை எழுதவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொதுவாக சுருக்கமான விடையாக இருத்தல் வேண்டும். அதேவேளை தலைப்பின் அனைத்து பிரதான விடயங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ii. பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்கான விடை கட்டுரைவினாவினைப் போன்று பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன

i) அறிமுகம் / விடைக்கான பிரவேசம் – உயர்ந்தபட்சம் 1 புள்ளி

ii) தரவுகளை / கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விவரிப்பு: உயர்ந்தபட்சம் 8 புள்ளிகள். கலந்துரையாடலுக்கு புள்ளி வழங்கும்போது விடையின் தரம், குறிப்பாக பாடம் தொடர்பான ஆழமானஅறிவு, சுயாதீனஅறிவு, விவரண மற்றும் பகுப்பாய்வுதிறன்கள், மொழிநடை மற்றும் முன்வைக்கும் திறன் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

iii) முடிவுரை – உயர்ந்தபட்சம் 1 புள்ளி

குறிப்பு: சில பரீட்சார்த்திகள் கட்டுரைவகை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில் அறிமுகம் / விடைக்கான பிரவேசம், முடிவுரை ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடாது எழுதியிருக்கலாம். தயவுசெய்து அவை பற்றிக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளை வழங்கவும்.



Department of Examinations

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................ ✓ △ 4/5
........................................................
........................................................

(ii) ........................................................ ✓ △ 3/5
........................................................
........................................................

(iii) ........................................................ ✓ △ 3/5
........................................................
........................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✻ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✻ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ✻ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✻ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுக.
- ✻ ஒவ்வொரு வினாவுக்கும் **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

Department of Examinations

● 1 தொடக்கம் 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்புடைய ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் மட்டுமே சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சியில்

A – புராதன கிரேக்க சிந்தனையாளர்கள் மிக முக்கிய பங்களிப்பினை வழங்கினர்.
B – அதன் பாடப்பரப்பும் அணுகுமுறைகளும் விரிவடைந்துள்ளன.
C – 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் பின்னரே அது சமூக விஞ்ஞானம் என்ற நிலையை அடைந்தது.
D – அது எப்போதும் சமூக வகுப்புகளுக்கிடையிலான முரண்பாடுகளை வலியுறுத்தியது.
E – அது அரசு மற்றும் அரசாங்கம் என்ற கற்கைப் பரப்புக்கு அப்பால் விரிவடைந்துள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**2.** அரசியல் விஞ்ஞானக் கோட்பாட்டிற்கிணங்க அரசு,

A – வரலாற்று ரீதியான மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறுபட்ட வடிவங்களைப் பெற்றுள்ளது.
B – மத்தியகாலத்தில் நிலமானியப் பண்பினைக் கொண்டிருந்தது.
C – தற்காலத்தில் தேசிய அரசு என அடையாளப்படுத்தப்படுகின்றது.
D – எப்போதும் சமாதானத்துக்காக மட்டுமே அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.
E – இறைமை அதிகாரம் இல்லாது இருப்புக்கொள்ள முடியாத ஒரு சமூக நிறுவனம் ஆகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**3.** தலையிடா அரசு

A – தனிமனிதவாதத்தினை வலியுறுத்துகின்றது.
B – பொருளாதாரத்தினைக் கட்டுப்படுத்துகின்றது.
C – சமூகத்தில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் உறுதி செய்கின்றது.
D – தனிநபர்கள் பொருளாதார செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றது.
E – மானிட சுதந்திரத்திற்கு அவசியமான சூழ்நிலையினை உருவாக்குகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

4. தாராள ஜனநாயக அரசாங்கத்தின் அத்தியாவசியப் பண்புகளில் உள்ளடங்குவன
   A – மக்கள் இறைமை
   B – உரிமைகள்
   C – பிரதிநிதித்துவ அரசாங்கம்
   D – சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்
   E – ஒற்றையாட்சி அரசியலமைப்பு
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

5. மந்திரிசபை அரசாங்கமுறையொன்றில்
   A – பிரதமரும் அமைச்சரவையும் நிறைவேற்று அதிகாரத்தினைப் பிரயோகிப்பர்.
   B – பிரதமர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவினைக் கொண்டிருக்க வேண்டும்.
   C – அமைச்சரவை சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லை.
   D – நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் நெருங்கிய இணைப்பினைக் கொண்டிருக்கும்.
   E – அரசியல் நிறைவேற்றுத்துறையின் உறுப்பினர்கள், சட்டத்துறை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

6. கலப்பு நிறைவேற்று முறையொன்றில்
   A – இரண்டு நிறைவேற்றுத்துறைகள் சமாந்தரமாகச் செயற்படும்.
   B – ஜனாதிபதிக்கு பிரதமரைவிட அதிக அதிகாரங்கள் காணப்படும்.
   C – ஜனாதிபதி நேரடியாக மக்களினால் தெரிவு செய்யப்படுகின்றார்.
   D – பிரதமர் ஜனாதிபதிக்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை.
   E – சட்டசபை மூலம் பிரதமர் பதவி நீக்கப்பட்டாலும் அது ஜனாதிபதியின் பதவியின் மீது பாதிப்பினை ஏற்படுத்தாது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

7. அரசாங்கத்தின் உள்ளகப் பணிகளில் உள்ளடங்குவன
   A – அரசின் ஆட்புல எல்லைகளை பாதுகாத்தல்
   B – சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுதல்
   C – சமூக நலன்களை வழங்குதல் / திட்டமிடுதல்
   D – சமூக முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்
   E – சுற்றாடல் பாதுகாப்பினை உறுதி செய்தல்
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

8. அரசியல் சமூகமயமாதல் வழிமுறைகளாவன
   A – வெகுஜன ஊடகம்
   B – கல்விசார் நிறுவனங்கள்
   C – குடும்பம்
   D – மத வழிபாட்டுத்தலங்கள்
   E – நட்பு சார்ந்த அமைப்புக்கள் / சங்கங்கள்
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

9. அரசியல் வன்முறையானது
   A – சில அரசியல் குழுக்களுக்கிடையிலான ஒரு வகையான நடத்தைப் போக்காகும்.
   B – கலவரம் மூலம் வெளிப்படுகின்றது.
   C – இனவாதத்தில் அடையாளங் கண்டுகொள்ளப்படுகின்றது.
   D – பயங்கரவாதத்தின் ஒரு பிரதான ஆயுதமாகும்.
   E – சமூக சமாதானத்தினை ஊக்குவிக்கின்றது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

10. பிரஜைகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நவீன ஜனநாயக அரசுகளில் காணப்படும் ஏற்பாடுகளில் உள்ளடங்குவன
   A – சட்டத்தின் ஆட்சியைத் தாபித்தல்
   B – நிறைவேற்று அதிகாரத்தினை மத்தியமயப்படுத்துதல்
   C – அரசியலமைப்பில் மனித உரிமைகளை உள்ளடக்குதல்.
   D – ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.
   E – பொருளாதார மற்றும் சமூக நீதியினை ஏற்படுத்துதல்.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

Department of Examinations

11. டொனமூர் அரசாங்க முறையின் **பாதகமான** விளைவுகளில் உள்ளடங்குவன
A – அரசாங்கத்தின் வினைத்திறனின்மை
B – சமூக நலக் கொள்கைகள் தோற்றம் பெற்றமை
C – ஆளுனரின் அதிகாரங்கள் அதிகரித்தமை
D – சட்டசபை உறுப்பினர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் முன்னுரிமை பெற்றமை
E – அமைச்சர்களிடத்தில் கூட்டுப்பொறுப்புத் தத்துவம் காணப்படாமை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

12. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மகாதேசாதிபதியின் அதிகாரங்களில் உள்ளடங்குவன
A – பாராளுமன்றத்தினால் சம்மதமளிக்கப்பட்ட மசோதாக்களுக்கு அனுமதி வழங்குதல்
B – பாராளுமன்றத்தை கூட்டுதல், அமர்வுகளை நிறுத்துதல், கலைத்தல்
C – பிரதமரைப் பதவி நீக்குதல்
D – செனட் சபைக்கு 15 பேரை நியமித்தல்
E – சம்பிரதாயப்பூர்வமான நிகழ்வுகளின்போது பாராளுமன்றத்தைத் தலைமையேற்று வழிநடத்துதல்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

13. பொது நிர்வாகம்
A – பொதுக் கொள்கையினை அமுல்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.
B – சமூக நலக் கொள்கைகளின் காரணமாக விரிவடைந்துள்ள ஒரு கற்கைப் பரப்பாகும்.
C – பணியகவமைப்பின் ஊடாக செயற்படுகின்றது.
D – அரசியல்மயமாக்கப்படாதபோது மிகவும் வினைத்திறனாகக் காணப்படும்.
E – ஒரு கல்வித்துறையாக இந்தியாவிலேயே ஆரம்பிக்கப்பட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

14. மோதல் நிலைமாற்றம் என்பது
A – மோதல் தீர்வில் காணப்படும் குறைபாடுகளை சரிசெய்ய எத்தனிக்கின்றது.
B – மோதலின் சூழமைவினை மாற்றுவதனை குறித்து நிற்கின்றது.
C – மோதல் தரப்பினர்களுக்கிடையிலான உறவினை மாற்றியமைப்பதனை குறித்து நிற்கின்றது.
D – மோதலின் சமூக, அரசியல் மூலக்காரணிகள் மீது அதிக கவனத்தினைச் செலுத்துகின்றது.
E – மோதலை ஒரு தரப்பு வெற்றிகொள்ளும் வகையில் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வசதியளிக்கின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

15. சோசலிச அரசாங்க முறை
A – தனிக்கட்சி முறையொன்றினை ஊக்குவித்தது
B – கம்யூனிச சமூகமொன்றினைத் தாபிப்பதனை நோக்காக கொண்டிருந்தது
C – தனிநபர் சுதந்திரத்தினை ஏற்றுக்கொண்டது
D – மார்க்ஸிய சிந்தனையின் மூலம் வழிநடத்தப்பட்டது
E – சமத்துவமான சமூகமொன்றினை ஊக்குவித்தது
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

16. சிவில் சமூக இயக்கங்கள்
A – அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல் அதிகாரத்தினைப் பெற எத்தனிக்கின்றன.
B – குறிப்பிட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல்களைக் கொண்டுள்ளன.
C – சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட பிரஜைகளுக்கு வாய்ப்பளிக்கின்றன.
D – பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறைக்கு உள்ளீடுகளை வழங்குகின்றன.
E – நவீன ஜனநாயகத்திற்கு அத்தியாவசியமாகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

17. ஒற்றையாட்சி அரசாங்க மாதிரியின் கீழ்
A – இறைமை அதிகாரம் மத்திய மற்றும் பிராந்திய அரசாங்கங்களுக்கிடையே பகிரப்படுகின்றது.
B – உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சுயாதீனத்தன்மை காணப்படுவதில்லை.
C – ஒருமைப்படுத்தப்பட்ட நீதி முறைமை காணப்படும்.
D – உள்ளூர் நலன்களைவிட தேசிய நலன்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படும்.
E – இறைமை அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் மாத்திரம் காணப்படும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

Department of Examinations

18. சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்களாவன
A – தேசிய அரசுகள்
B – சமயத் தலைவர்கள்
C – அரசுகளுக்கிடையிலான அமைப்புகள்
D – கீர்த்திமிகு நபர்கள்
E – சர்வதேச நிதி நிறுவனங்கள்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

19. அரசுகள் பொதுவாக அதிகார அரசியலில் ஈடுபடுவது
A – தேசிய பாதுகாப்பிற்காகவாகும்.
B – தேசிய பொருளாதார நன்மைகளுக்காகவாகும்.
C – ஆட்சியாளர்களின் தனிப்பட்ட திருப்திக்காகவாகும்.
D – தேசிய அபிமானத்திற்காகவாகும்.
E – கருத்தியல் ரீதியான காரணங்களுக்காகவாகும்.
(1)ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

20. அதிகார சமநிலை தொடர்பான எண்ணக்கருவிற்கிணங்க
A – அதிகார சமமின்மை காணப்படும்போது அரசுகள் போரில் ஈடுபடுகின்றன.
B – சில சமயங்களில் அரசுகள் தமது சொந்த முயற்சிகளின் மூலம் அதிகார சமநிலையினை அடைய முடியும்.
C – அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு அதிகார சமநிலையினைக் கட்டியெழுப்ப உதவும்.
D – அரசுகளுக்கிடையிலான அதிகார சமநிலை போரை அவசியமற்றதாக்குகின்றது.
E – அரசுகளுக்கிடையிலான அதிகார சமநிலை உலக சமாதானத்துக்குத் தடையாகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

21. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் பாராளுமன்றம்
A – மாவட்டரீதியாக தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் 196 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
B – பாராளுமன்றத்தால் முறையாக நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தினை சபாநாயகருக்கு வழங்கியுள்ளது.
C – அரசியலமைப்பின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டினை இடைநிறுத்தும் வகையில் சட்டங்களை உருவாக்கும் அதிகாரங்களுக்கு உரித்துடையதல்ல.
D – பொது நிதியினைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்திற்கு உரித்தாவதில்லை.
E – புதிய பாராளுமன்றத்துக்கான தேர்தல் தினமொன்றினைப் பிரகடனப்படுத்தாது ஜனாதிபதியால் பாராளுமன்றத்தினைக் கலைக்க முடியாது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

22. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உச்ச நீதிமன்றம் (Supreme court)
A – பாராளுமன்றச் சட்டங்களை நீதிப்புனராய்வுக்கு உட்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
B – மசோதாக்களின் அரசியலமைப்புத் தன்மையினைத் தீர்மானிக்கும் முழுமையான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும்.
C – ஆறுக்குக் குறையாததும் பத்துக்கு மேற்படாததுமான நீதிபதிகளைக் கொண்டுள்ளது.
D – அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.
E – நாட்டின் மிகமேலானதும் முடிவானதுமான நீதிமன்றமாகக் காணப்படுகின்றது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

23. சர்வதேச சமாதானம் மற்றும் புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்காக, அரசுகள் கையாளும் வழிமுறைகளாவன
A – கூட்டுப் பாதுகாப்பு
B – ஆயுதப் போட்டி
C – சர்வதேச சட்டம்
D – ஆயுதப் பரிகரணம்
E – சர்வதேச உடன்படிக்கைகள்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

Department of Examinations

**24.** ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை

A – ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற 47 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

B – அங்கத்துவ நாடுகளின் மனித உரிமைகளின் நிலைமை தொடர்பான அனைத்துலக கால சுழற்சி மீளாய்வினை (Universal Periodic review) ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு முறையும் மேற்கொள்கின்றது.

C – 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

D – பொதுவில் வருடாந்தம் மூன்று அமர்வுகளை நடாத்துகின்றது.

E – நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் தனது அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**25.** பிரித்தானிய பொதுநலவாய அமைப்பு

A – அதனது பட்டயத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகின்ற எந்தவொரு நாட்டிற்கும் உறுப்புரிமையை வழங்குகின்றது.

B – இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை அதனது உச்சி மாநாட்டினை நடாத்துகின்றது.

C – லண்டன் நகரில் தனது செயலகத்தைக் கொண்டுள்ளது.

D – சில நாடுகளுக்கு அவற்றின் உறுப்புரிமையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளித்துள்ளது.

E – பிரித்தானிய முடியை அதனது உத்தியோகபூர்வ தலைவர்/தலைவியாக கொண்டுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

Department of Examinations

- **26** தொடக்கம் **40** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் அதன் தலைப்புடன் தொடர்புடைய ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றில் **நான்கு** கூற்றுகள் மட்டும் **சரியானவை. பிழையான** கூற்றினை தெரிவு செய்க.

**26.** 1833 ஆம் ஆண்டு கோல்புருக் - கமரன் சீர்திருத்தங்கள்

(1) இலங்கையில் முதலாளித்துவத்துவ பொருளாதாரத்திற்கு அடித்தளமிட்டது.
(2) நாட்டின் நிர்வாகத்தினை ஒருமைப்படுத்தி மத்தியமயப்படுத்தியது.
(3) சுயாதீன நீதித்துறையினை ஸ்தாபித்தது.
(4) இலவச சுதேசக் கல்வி முறையினை அறிமுகம் செய்தது.
(5) சட்டசபையொன்றினை ஸ்தாபித்தது.

**27.** இலங்கையின் இடதுசாரி இயக்கம்

(1) அரச கொள்கைகளின் ஒரு நோக்கமாக சமூக நலனை வலியுறுத்தியது.
(2) பாராளுமன்ற ஜனநாயகத்தினை பலப்படுத்த பங்களித்தது.
(3) பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தது.
(4) கருத்தியல் முரண்பாடுகள் காரணமாக பின்னடைவினைச் சந்தித்தது.
(5) கூட்டணி அரசாங்கத்தை அமைக்கும் அரசியலை மறுதலித்தது.

**28.** 1911 தொடக்கம் 1924 வரையிலான காலப்பகுதியில் காலனித்துவ இலங்கையில் இடம்பெற்ற அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்

(1) ஆளுனரின் அதிகாரங்களைக் குறைத்தன.
(2) சமூகத்தில் சாதி முறையினை மறுசீரமைத்தன.
(3) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை அறிமுகம் செய்தன.
(4) சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தன.
(5) வரையறுக்கப்பட்ட பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறைக்கு வழிவகுத்தன.

**29.** காலனித்துவ இலங்கையின் தேசிய இயக்கமானது

(1) நகர மற்றும் தொழில்சார் உயர்குழாமினரின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டது.
(2) நாடுதளுவிய பரந்த வெகுஜன இயக்கமாகக் காணப்பட்டது.
(3) இனத்துவ அரசியல் காரணமாக பலவீனமடைந்தது.
(4) பொறுப்பாட்சி அரசாங்கத்தினைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.
(5) காலனித்துவ அரசாங்கத்தினை நேரடியாக சவாலுக்குட்படுத்தவில்லை.

**30.** டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை

(1) சட்ட மற்றும் நிறைவேற்று ஆகிய இரு அதிகாரங்களையும் கொண்டிருந்தது.
(2) தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டோர், நியமிக்கப்பட்டோர், பிரித்தானிய காரியதரிசிகள் ஆகியோரைக் கொண்டு காணப்பட்டது.
(3) அரச சபை என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
(4) அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்திற்கு அமைச்சர்கள் சபையினை பொறுப்பாக்கியது.
(5) அமைச்சர்கள் சபையினை நீக்கும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தது.

**31.** ஜனாதிபதித்துவ அரசாங்க மாதிரியின் கீழ்,
(1) நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் ஒரே நேரத்தில் இடம்பெறும் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றன.
(2) ஜனாதிபதியின் கீழ் காணப்படும் நிறைவேற்றுத்துறை சட்டத்துறையினைவிட அதிகாரம்மிக்கது.
(3) நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் தெளிவான பணிப்பிரிப்பு காணப்படும்.
(4) ஜனாதிபதி அரசின் தலைவராவார்.
(5) நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையிலான தொடர்புகள் அதிகாரப்பிரிவினை தத்துவத்திற்கிணங்கக் கட்டமைக்கப்பட்டுள்ளன.

**32.** இந்திய சமஸ்டி முறையில்,
(1) சில மாநிலங்கள் ஏனைய சில மாநிலங்களைவிட கூடுதலான அதிகாரங்களைக் கொண்டுள்ளன.
(2) குடியுரிமையினை தேசிய மற்றும் மாநில மட்டங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
(3) யூனியன் பிரதேசங்களுக்கு மாநிலங்களைவிட குறைந்தளவான அதிகாரங்களே காணப்படுகின்றன.
(4) மத்திய - மாநிலங்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரத்தினை உச்சநீதிமன்றம் கொண்டுள்ளது.
(5) அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தி மாநில அரசாங்கத்தைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கு உண்டு.

**33.** பிரான்சின் 1958 ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது,
(1) பலம்மிக்க ஜனாதிபதி முறையினை உருவாக்கியது.
(2) ஆரம்பத்தில் மக்களால் ஜனாதிபதி நேரடியாக தெரிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.
(3) ஜனாதிபதி மற்றும் மந்திரிசபை ஆகிய இரு அரசாங்க முறைகளின் தத்துவங்களையும் ஒன்றிணைத்ததாகக் காணப்பட்டது.
(4) பிரித்தானிய கபினட் முறைக்கு ஒப்பான கபினட் முறையினை உருவாக்கியது.
(5) பலம்மிக்க நிறைவேற்று அரசாங்கத்துக்கான முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகின்றது.

**34.** பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பு (சார்க்)
(1) தலைமைக் காரியாலயத்தை பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் கொண்டுள்ளது.
(2) 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
(3) அரச தலைவர் மாநாடுகளின் நிகழ்ச்சிநிரலில் இருதரப்பு அரசியல் பிணக்குகளை உள்ளடக்குவதில்லை.
(4) பிராந்தியத்துக்குள் வினைத்திறன் மிக்கவகையில் ஒத்துழைப்பினை பேணத் தவறியுள்ளது என்ற விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.
(5) ஓர் இலங்கையரை தற்போதைய செயலாளர் நாயகமாகக் கொண்டுள்ளது.

**35.** சர்வதேச அரசு - சார்பற்ற நிறுவனங்கள்
(1) சர்வதேச அரசியலின் செயற்பாட்டாளர்கள் ஆகும்.
(2) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திசார் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றன.
(3) சில சமயங்களில் தேசிய அரசாங்கங்களின் விமர்சனத்துக்கு உள்ளாகின்றன.
(4) ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமையினைப் பெற்றுள்ளன.
(5) சர்வதேச மோதல்களுக்கு சமாதான வழிமுறையிலான தீர்வுகளை ஊக்குவிக்கின்றன.

**36.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி முறை
(1) உ கோல் முறை எனவும் அழைக்கப்பட்டது.
(2) பிரதமரை அமைச்சரவையின் தலைவராக்கியது.
(3) 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் மாற்றங்களுக்கு உள்ளாகியது.
(4) அறிமுகப்படுத்தப்பட்டபோது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்குள்ளாகியது.
(5) நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை எனவும் அழைக்கப்பட்டது.

**37.** இலங்கையின் அரசியல் கட்சிமுறை
(1) இரு பிரதான கட்சிகளின் ஆதிக்கத்தைப் பண்பாகக் கொண்டமைந்துள்ளது.
(2) அதிகளவிலான சிறுகட்சிகளையும் கொண்டுள்ளது.
(3) இனத்துவ மற்றும் மதக் கோரிக்கைகளைக் கொண்ட கட்சிகளை உருவாக்கியுள்ளது.
(4) கூட்டு அரசியலை எப்போதும் ஊக்குவிப்பதில்லை.
(5) பாராளுமன்ற ஜனநாயக முறையின் ஊடாக வளர்ச்சி பெற்றுள்ளது.

Department of Examinations

**38.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகள் அத்தியாயம்
(1) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் ஆத்ம உணர்வினை பிரதிபலிக்கின்றது.
(2) பிரஜைகளின் உரிமை மீறல்களுக்குப் பரிகார வழிமுறைகளை வழங்குகின்றது.
(3) 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தினைவிட முன்னேற்றகரமான ஒன்றாகும்.
(4) இலங்கையில் சட்டத்தின் ஆட்சியினை பலவீனப்படுத்தியுள்ளது.
(5) தமது செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்தைப் பொறுப்புக்கூறச் செய்துள்ளது.

**39.** சட்டத்தின் அடிப்படை இயல்புகளில் உள்ளடங்குவன
(1) அதிகாரத்துவம்
(2) சமூக உறுப்பினர்களின் நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் இயலுமை
(3) மாற்றமுடியாமை
(4) தெளிவும் துல்லியமும்
(5) சமூகத் தேவைகளைப் பிரதிபலிப்பதாக இருத்தல்

**40.** பொதுக் கொள்கையானது,
(1) மக்களின் தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.
(2) இருக்கின்ற சட்ட கட்டமைப்பிற்குள் உருவாக்கப்பட வேண்டும்.
(3) நீதித்துறை மீளாய்விற்கு உட்பட வேண்டும்.
(4) ஆளும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து விலகிச்செல்லக் கூடாது.
(5) நிபுணர்களின் ஆலோசனைகள்/ உள்ளீடுகள் மூலம் மேம்படுத்தப்பட முடியும்.

- **41** தொடக்கம் **45** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் கருப்பொருளுடன் தொடர்புடைய ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒரு கூற்று மாத்திரமே சரியானது. பிழையான கூற்றுத் தொகுதியினை தெரிவு செய்க.

**41.** நவீன அரசுகள் என்பவை
A – ஐரோப்பாவில் நிலமானிய முறையின் வீழ்ச்சிக்குப் பின்னர் தோற்றம் பெற்றவையாகும்.
B – முதலாம் உலகப் போரின் பின்னர் சர்வதேச சங்கத்தில் இணைந்த அரசுகளாகும்.
C – அதிகார முகாம்களில் இருந்து விடுபட்ட சுதந்திர அரசுகளாகும்.
D – காலனித்துவத்திற்குப் பின்னர் ஐரோப்பாவுக்கு வெளியில் தோற்றம் பெற்ற அரசுகளாகும்.
E – நவ தாராள உலக பொருளாதார முறைமையில் இருந்து நன்மையடைகின்ற அரசுகளாகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**42.** விஞ்ஞான சோசலிசம்,
A – கம்யூனிசத்துக்கான மாற்றீடாகக் காணப்பட்டது.
B – வர்க்கப் போராட்டத்தின் ஊடாக சமூக முன்னேற்றம் ஏற்படும் என்பதனை நம்பியது.
C – சோசலிசத்தை அடைவதற்கு பாராளுமன்ற வழிமுறை பொருத்தமானதென குறிப்பிட்டது.
D – தொழிலாளர் வர்க்கம் தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முதலாளித்தவ அரசினை பயன்படுத்த முடியும் என நம்பியது.
E – கம்யூனிச சமூகத்தில் அரசு தொடர்ந்தும் நிலைகொள்ளும் என்ற கருத்தினையும் கொண்டிருந்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**43.** இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பு
A – ஓரங்க மன்றத்தினைக் கொண்ட பாராளுமன்றத்தினை அறிமுகம் செய்தது.
B – அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம் ஒன்றினைக் கொண்டிருந்தது.
C – சிறுபான்மையினர் உரிமைகளை மறுதலித்தது.
D – வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட மந்திரிசபை அரசாங்க முறையினைத் தாபித்தது.
E – பொதுச் சேவையினை அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**44.** இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு,
A – வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க மாதிரியில் இருந்து முழுமையாக விடுபட்டிருந்தது.
B – சட்டங்கள் தொடர்பான நீதிப்புனராய்வு அதிகாரத்தினை அறிமுகம் செய்தது.
C – தேர்தல் முறைமையினை மாற்றியமைத்தது.
D – பாராளுமன்ற இறைமை என்ற மூலதத்துவத்தினை பலப்படுத்தியது.
E – மதசார்பற்ற அரசு என்ற தத்துவத்தினை அறிமுகம் செய்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

Department of Examinations

45. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு
A – மாவட்ட அடிப்படையிலான அதிகார பரவலாக்க முறையை அறிமுகம் செய்தது.
B – அமெரிக்க அரசியலமைப்பு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டமைந்தது.
C – கபினட்டின் சுயாதீனத்தன்மையினைப் பலப்படுத்தியது.
D – பொதுச் சேவையினை அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்தது.
E – பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்கும் தனித்தனியான தேர்தல்களை அறிமுகம் செய்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

- 46 தொடக்கம் 50 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுகளைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5)ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினை தெரிவுசெய்து உங்களின் விடைத்தாளில் எழுதவும்.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 46. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஒம்புட்ஸ்மனுக்கு பிரஜைகளின் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பாராளுமன்றம் ஒம்புட்ஸ்மனின் சம்பளத்தை அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. |
| 47. | 1978 ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பின் கீழ், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதிபெற அவசியமான வெட்டுப்புள்ளி (வாக்கு வீதம்) 5% ஆகக் காணப்பட்டது. | விகிதாசார பிரதிநிதித்துவ முறை பொதுவாக சிறிய கட்சிகளுக்கும் சிறுபான்மையினக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நன்மையளிக்கின்றது. |
| 48. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 17ஆவது சீர்திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களை மேற்கொள்வதில் ஜனாதிபதிக்கிருந்த தற்றுணிவு அதிகாரங்களைக் குறைத்தது. | 18 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 49. | 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் இரண்டாம் மன்றமொன்றினைத் ஸ்தாபிக்கவில்லை. | முதலாம் குடியரசு அரசியலமைப்பினை உருவாக்கியோர் பாராளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்படாத உறுப்பினர்களைக் கொண்டதொரு சபை இருக்க கூடாது என்ற நம்பிக்கையினைக் கொண்டிருந்தனர். |
| 50. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சபாநாயகருக்கு பாராளுமன்றத்தைக் கூட்டவும் அமர்வுகளை நிறுத்தவும் அதிகாரம் உண்டு. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்ற அமர்வுகளுக்கான உறுப்பினர்களின் நிறைவெண் 40 ஆகும். |

* * *

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

### පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம் **23** විෂයය / பாடம் **அரசியல் விஞ்ஞானம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

Department of Examinations

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 2 | 31. | 1 | 41. | 2 |
| 02. | 2 | 12. | 3 | 22. | 5 | 32. | 2 | 42. | 4 |
| 03. | 4 | 13. | 1 | 23. | 4 | 33. | 4 | 43. | 2 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 1 | 34. | 1 | 44. | 2 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 5 | 35. | 4 | 45. | 1 |
| 06. | 2 | 16. | 5 | 26. | 4 | 36. | 2 | 46. | 2 |
| 07. | 5 | 17. | 5 | 27. | 5 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 2 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 3 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 5 | 40. | 4 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் $1 \times 50 = 50$

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..........................................

| பகுதி A | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறு விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனைப் பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **B** இலிருந்தும் **C** இலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி A

**1.** (1) மக்கியவல்லிக்குச் சமமான சிந்தனைகளை முன்வைத்த புராதன இந்திய அரசியல் சிந்தனையாளர் யார்?

..........................................................................................

(2) அகிம்சாவாதத்தினைப் பிரதான கருப்பொருளாகக் கொண்ட நவீன இந்திய அரசியல் சிந்தனையாளர் யார்?

..........................................................................................

**2.** 1970 ஆம் ஆண்டு இலங்கையில் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்று அரசியல் கட்சிகளைக் கொண்ட கூட்டணியாகக் காணப்பட்டது. அதில் கூட்டிணைந்த இரு கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**3.** இரண்டாம் உலகப்போரின்போது ஐரோப்பாவில் மூன்று பாசிச அரசுகள் காணப்பட்டன. அவ்வரசுகளில் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**4.** பின்வரும் ஒவ்வொரு எண்ணக்கருவையும் முன்வைத்த அரசியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.

(1) தத்துவ ஆட்சியாளன் : ..........................................................................................

(2) வரலாறு தொடர்பான பொருள்முதல்வாத எண்ணக்கரு : ..........................................

Department of Examinations

5. கீழே தரப்பட்டுள்ள பின்வரும் ஆண்டுகள் நவீன ஐரோப்பாவில் ஜனநாயக நிலைமாற்றத்திற்கு வித்திட்ட முக்கியமான இரண்டு போராட்டங்களைக் குறித்து நிற்கின்றன. அப்போராட்டங்கள் யாவை?

(1) 1688 : ..........................................................................................

(2) 1789 : ..........................................................................................

6. ஜொஹான் கல்துங் என்பவரால் உருவாக்கப்பட்ட மோதல் முக்கோணியின் **இரண்டு** கூறுகளைப் பெயரிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

7. மோதல் தீர்வுடன் தொடர்புடைய **இரண்டு** எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

8. தேசிய நலனை ஊக்குவிப்பதற்கு அரசுகள் பயன்படுத்தும் உத்திகள்/ வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

9. சர்வதேச அரசியலில் உலக சமாதானத்தினைப் பேணுவதற்கு அரசுகள் பிரயோகிக்கும் வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

10. ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பில் ஆறு நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

11. ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் உள்வாரியான காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

12. அரசியல் விஞ்ஞான கற்கையில் முறைமைப் பகுப்பாய்வு முறையினை அறிமுகம் செய்த **இரண்டு** அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

13. அரசாங்கத்தின் அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

Department of Examinations

**14.** நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படும் வழிமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள **இரண்டு** அரசாங்க மாதிரிகளைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**15.** சுதந்திர இலங்கையின் முதலாவது மகாதேசாதிபதி, முதலாவது ஜனாதிபதி ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) முதலாவது மகாதேசாதிபதி : ..............................................................................

(2) முதலாவது ஜனாதிபதி : ..................................................................................

**16.** (1) இலங்கையில் மாகாணசபைகளை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..............................................................................................................

(2) மாகாணசபை முறையினை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உதவிய நாடு எது?

..............................................................................................................

**17.** (1) இலங்கையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினைப் பெயரிடுக.

..............................................................................................................

(2) இலங்கையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை இல்லாதொழித்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..............................................................................................................

**18.** (1) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அறிமுகம் செய்யப்பட்ட 18 ஆவது சீர்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்ட புதிய பெயர் என்ன?

..............................................................................................................

(2) 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவைக்கு உத்தியோகபூர்வ தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

..............................................................................................................

**19.** (1) இலங்கையில் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் முதன் முதலில் எந்த அரசியலமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன?

..............................................................................................................

(2) இலங்கை ஒற்றையாட்சி அரசாக எந்த அரசியலமைப்பின் கீழ் முதன்முதலில் பிரகடனப்படுத்தப்பட்டது?

..............................................................................................................

**20.** (1) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நியமன உறுப்பினர்கள் எத்தனை பேர் காணப்பட்டனர்?

..............................................................................................................

(2) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்ற தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................................

* *

Department of Examinations

# பகுதி A

## 01 - 20 வரையுள்ள ஒவ்வொரு குறு வினாவுக்குமுரிய விடைகள்

**வினா இல : 01**

1. கௌடில்யர் / சாணக்கியர்
2. மகாத்மா காந்தி / காந்தி / மோகனதாஸ் கரம்சந்த் காந்தி

**வினா இல : 02**

1. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி / SLFP
2. கம்யூனிஸ்ட் கட்சி / SLFP
3. லங்கா சமசமாஜக் கட்சி / LSSP

**வினா இல : 03**

1. ஜேர்மனி
2. இத்தாலி
3. ஸ்பெயின்

Department of Examinations

**வினா இல : 04**

1. பிளேட்டோ
2. கார்ல் மாக்ஸ் / மார்க்ஸ்

**வினா இல : 05**

1. ஆங்கிலப் புரட்சி / இரத்தம் சிந்தாப் புரட்சி / இங்கிலாந்துப் புரட்சி / அமைதிப் புரட்சி / மகோன்னதப் புரட்சி
2. பிரான்சியப் புரட்சி

**வினா இல : 06**

1. நடத்தை
2. மனப்பாங்கு / எண்ணப்பாங்கு
3. சூழமைவு

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 07**

1. மோதல் தவிர்ப்பு
2. மோதலுக்கான தற்காலிகத் தீர்வு
3. மோதல் முகாமைத்துவம்
4. மோதல் தீர்வு
5. மோதல் நிலைமாற்றம்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 08**

1. வெளிநாட்டுக் கொள்கையும் இராஜதந்திர உத்திகளும்
2. பொருளாதார அதிகாரமும் பொருளாதாரத் தடையும்
3. ஆள்புல ஊடுருவலும் தலையிடுதலும் / ஆக்கிரமிப்பு
4. யுத்தம் / நிர்ப்பந்த அதிகாரம் / இராணுவத் தலையீடு
5. கூட்டணிகளும் உடன்படிக்கைகளும் / சமாதான உத்திகள்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 09**

1. அதிகாரச் சமநிலை
2. கூட்டுப் பாதுகாப்பு
3. சர்வதேச சட்டங்கள்
4. ஆயுதக் கட்டுப்பாடு
5. ஆயுதப் பரிகரணம்
6. உலக அரசாங்கம்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

Department of Examinations

**வினா இல : 10**

1. பொதுச்சபை
2. பாதுகாப்புச் சபை
3. பொருளாதார சமூக சபை
4. சர்வதேச நீதிமன்றம்
5. நம்பிக்கைப் பொறுப்புச் சபை
6. செயலகம்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 11**

1. புவியியற் காரணி / புவியியல் அமைவிடம் / புவியியல் நிலை
2. வரலாற்றுக் காரணி / வரலாறு
3. தேசிய இயலுமை / இயல்திறன்
4. பொதுசன அபிப்பிராயம்
5. தேசிய கருத்தியல்
6. தேசிய பொருளாதார நலன்கள்
7. தேசிய பாதுகாப்பு நலன்கள்
8. கலாச்சாரக் காரணிகள்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 12**

1. டேவிட் ஈஸ்டன் / ஈஸ்டன்
2. ஹப்ரியல் ஆமண்ட் / ஆமண்ட்

**வினா இல : 13**

1. முறையானது : அதிகாரப் பிரிவினை, அரசியலமைப்புவாதம், அரசியலமைப்பு, நீதிப்புலனாய்வு, இருமன்ற சட்டசபை
2. முறையற்றது : ஊடகம், சிவில் சமூகம், அமுக்கக் குழுக்கள், சமூக இயக்கங்கள்

**வினா இல : 14**

1. ஜனாதிபதித்துவ அரசாங்கம்
2. மந்திரிசபை அரசாங்கம் / பாராளுமன்ற அரசாங்கம் / பாராளுமன்ற முறை
3. கலப்பு நிறைவேற்று முறை / அரைகுறை ஜனாதிபதி முறை
4. எதேச்சதிகார அரசாங்கம்

**(எவையேனும் இரண்டு விடைகள்)**

**வினா இல : 15**

1. சேர் ஹென்றி மொனிக் மேசன் மூர்
2. வில்லியம் கோபல்லாவ

**வினா இல : 16**

1. 1978 ஆம் அரசியலமைப்பிற்கான 13வது திருத்தம் / 13வது திருத்தம் / 13
2. இந்தியா

**வினா இல : 17**

1. கோல்புறுக் சீர்திருத்தம் / 1833
2. டொனமூர் சீர்திருத்தம் / 1931

**வினா இல : 18**

1. பாராளுமன்றப் பேரவை
2. பாரளுமன்ற சபாநாயகர் / சபாநாயகர்

**வினா இல : 19**

1. சோல்பர் அரசியலமைப்பு / சோல்பரி / 1947
2. முதலாம் குடியரசு அரசியலமைப்பு / 1972

**வினா இல : 20**

1. 6 பேர்
2. 29 பேர்

**(இறுத்திப் புள்ளி = 20 புள்ளிகள்)**

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

**அறிவுறுத்தல்கள்:**

※ **B, C** ஆகிய பகுதிகளிலிருந்து இவ்விரண்டு வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி B

**1.** அரசியல் விஞ்ஞானம் ஒரு சமூக விஞ்ஞானமாகக் கருதப்படுவது ஏன் என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)

**2.** தேசம் மற்றும் இனத்துவம் ஆகியவற்றுடனான அரசின் உறவினை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**3.** ஆட்சிமுறைக் கட்டமைப்பினுள் அரசாங்கத்தின் பணிகளை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**4.** ஜனநாயக சமூகமொன்றில் சுதந்திரம், சமத்துவம் ஆகியன ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)

## பகுதி C

**5.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தலைப்புகளை ஆராய்க.

(i) கோல்புருக் கமரன் சீர்திருத்தத்தின் அரசியல் விளைவுகள்

(ii) இலங்கையில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இடதுசாரி இயக்கங்கள் வழங்கிய அரசியல் பங்களிப்பு

(iii) டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கு வித்திட்ட பின்னணிக் காரணிகள்

(iv) இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வளர்ச்சிபெற்ற இனத்துவ அரசியலின் போக்குகள்

(10 × 2 =20 புள்ளிகள்)

**6.** 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் உருவாக்கத்திற்கு வித்திட்ட காரணிகளைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

**7.** 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளின் கீழ் சட்டத்துறையின் அதிகாரங்களை ஒப்பிடுக. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டுக்குக்** குறிப்புகள் எழுதுக.

(i) பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறையின் கட்டங்கள்

(ii) மோதல் தவிர்ப்பு, மோதல் தீர்வு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்

(iii) சர்வதேச அரசியலில் அரசுகள் தேசிய அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் வழிமுறைகள்

(iv) மந்திரிசபை அரசாங்க முறை, ஜனாதிபதித்துவ அரசாங்க முறை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations

# அரசியல் விஞ்ஞானம் II
## பகுதி B

**வினா இலக்கம் 01 :**

**அரசியல் விஞ்ஞானம் ஒரு சமூக விஞ்ஞானமாகக் கருதப்படுவது ஏன் என்பதனை விளக்குக.**

**(20 புள்ளிகள்)**

### நோக்கம்

இவ் வினாவின் நோக்கம் பரீட்சார்த்திகளின் .

(a) அரசறிவியலின் இயல்பு பற்றிய அறிவைப் பரீட்சித்தல்

(b) அரசறிவியல் ஏன் ஒரு சமூக விஞ்ஞானம் என்பதை விவரிக்கும் ஆற்றலைப் பரீட்சித்தல் போன்றவையாகும்.

### அறிமுகம்

அறிமுகப் பந்தியில் அரசறிவியல் நவீன சமூக விஞ்ஞானத்தின் ஒரு கிளையாகவும் அதேவேளை மிகவும் பழமை வாய்ந்த சமூக விஞ்ஞான கற்கைத் துறையாகவும் விளங்கி புராதன கிரேக்கர் காலம் வரை நீண்டு செல்லும் வரலாற்றையும் கொண்டுள்ளதென்பதைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் அரசறிவியல் ஒரு நவீன சமூக விஞ்ஞானமாக 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் எழுச்சியுற்றது.

### கலந்துரையாடல்

I. அரசியல் என்பது சமூகத்தினதும் மற்றும் சமூகத்தில் என்ன இடம்பெறுகின்றது என்பதனையும் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது. ஆகவே அரசியலைக் கற்பதென்பது ஒட்டுமொத்தத்தில் சமூகத்தினைக் கற்கின்ற ஒரு பகுதியாகவும் இருக்கவேண்டும்.

II. அரசறிவியல் அரசியல் அதிகாரம் பற்றிக் கற்கின்ற இயலாகும். அரசியல் அதிகாரத்தினுடைய இயல்பே சமூகத்தை மையப்படுத்தியதாகும். ஏனெனில், சமூகத்தில் காணப்படுகின்ற அதனுடைய பல்வேறு மூலக்கூறுகள் அரசிற்கும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திற்கும் ஆளும் அதிகாரத்தை வழங்குகின்றது. சமூகமே ஆட்சியாளர்கள் ஆட்சிபுரிவதற்கான அவ்வதிகாரத்தை வழங்குகின்றது. ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து அகற்றுவதனையும் சமூகமே மேற்கொள்கின்றது. ஆகையால் அரசறிவியல் கற்கைத்துறையானது அரசியலையும் அதிகாரத்தையும் சமூகத்துடன் தொடர்புபடுத்தி கற்கின்றது.

III. ஆகவே அரசறிவியல் ஏனைய சமூகவிஞ்ஞானக் கற்கைகளான பொருளியல், சமூகவியல், மானுடவியல், புவியியல், சட்டம், வரலாறு மற்றும் குடித்தொகையியல் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டுள்ளது. நவீன அரசியல் விஞ்ஞானம் மேற்குறிப்பிட்ட கற்கைத்துறைகளுடன் ஒரு சமூக விஞ்ஞான கற்கைத் துறையாக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே வளர்ச்சியடையத் தொடங்கியது.

Department of Examinations

IV. சமூகவிஞ்ஞானக் கற்கைகளுடன் இவ்வாறு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தமையால் அரசறிவியல் ஏனைய கற்கைத் துறைகளினதும் அணுகுமுறைகள், கோட்பாடுகள் மற்றும் முறையியலை வேண்டிநிற்கின்றது. ஆகையால் அதிகமான அரசியல்விஞ்ஞான கோட்பாடுகளும் ஆய்வுமுறைகளும் தத்துவம், சட்டம், பொருளாதாரம் மற்றும் சமூகவியல் துறைகளின் செல்வாக்கிற்குட்பட்டன (மேற்படி விடைகளை உதாரணங்களுடன் விளக்குதல் வேண்டும்).

V. அரசியல் விஞ்ஞானம் பல்துறை அணுகுமுறையின் பயன்பாட்டிலிருந்து நன்மையடைந்துள்ளது.

VI. அரசியல் என்பது அரசாங்கத்தின் தீர்மானம் எடுத்தல் மற்றும் அமுலாக்கல் என்பவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதன்று. சமூகத்தின் அரசியல் செயற்பாடுகளில் வேறுபட்ட சமூகசக்திகள், இயக்கங்கள் மற்றும் குழுக்கள் ஈடுபடுவதுடன், அவை அரசாங்கத்தின் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக, தொழிற்சங்க செயற்பாடுகள், சிவில்சமூகம், பிரஜைகள் குழுக்கள், மாணவர் இயக்கங்கள், ஆதரவு தேடும் மற்றும் நலன்பேண் குழுக்கள், சமூக இயக்கங்கள் மற்றும் சமூக மற்றும் சூழலியல் செயற்பாட்டுவாதம் என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

கலந்துரையாடலின் பிரதான விடயங்களை மையப்படுத்தி சமகால அரசியல் விஞ்ஞானம் என்பது ஒரு பரந்துபட்ட சமூகவிஞ்ஞானக் கற்கைநெறி என்பதனை முடிவுரையில் வலியுறுத்துதல்.

Department of Examinations

**வினா இலக்கம் 02 :**
**தேசம் மற்றும் இனத்துவம் ஆகியவற்றுடனான அரசின் உறவினை விவரிக்குக.**
**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினா அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி அரசு, தேசம் மற்றும் இனத்துவம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்பு குறித்த பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் அவற்றுக்கிடையிலான தொடர்பினை விவரிக்கும் திறனை மதிப்பீடு செய்கின்றது.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- அரசு, தேசம் மற்றும் இனத்துவத்தை வரையறுத்தல்.
- நவீன தேசிய அரசில் எவ்வாறு பல இனங்கள் அல்லது இனத்துவ சமூகங்கள் இருக்கமுடியும் என்பதனை எடுத்துக்காட்டுதல்.
- தேசிய ஐக்கியத்தினை ஏற்படுத்துவதில் அரசின் வகிபாங்கினை விளக்குதல்.

Department of Examinations

**அறிமுகம்**

அறிமுகத்தில் தேசம் மற்றும் இனத்துவம் என்பவற்றுக்கிடையிலான உறவு அண்மைக்கால தோற்றம் என்பதனையும், நவீன தேசிய அரசு தொடர்பான கற்கையில் இது ஒரு பிரதான பகுதியாக காணப்படுகின்றது என்பதனையும் குறிப்பிட முடியும். காரணம் தேசம் மற்றும் இனக்குழுக்கள் ஆகியன மானிட சமூகத்தின் அபிவிருத்தியில் ஒப்பீட்டளவில் புதியவையாகும்

**கலந்துரையாடல்**

I. அரசு மற்றும் தேசம் ஆகியன ஒன்றில் ஒன்று நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. பல அரசுகளின் உத்தியோகபூர்வப் பெயர் தேசத்தின் அடையாளத்தினை கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

II. அரசு என்பது இறைமை, தேசத்துவம், நிச்சயிக்கப்பட்ட ஆள்புலம் மற்றும் அரசாங்கம் என்பவற்றின் அடிப்படையில் ஒழுங்கமைந்த ஒரு அரசியல் சமூகத்தினைக் குறித்து நிற்கின்றது. தேசம் என்பது பொதுவான கலாசாரம் மற்றும் அடையாளத்துடன்கூடிய அரசியல் சமூகம் ஒன்றின் ஒன்றிணைந்த தன்மையினை விளக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற பிறிதொரு எண்ணக்கருவாகும். இனத்துவம் என்பது தேசிய அரசொன்றுக்குள் காணப்படும் பிரத்தியேக மற்றும் வேறுபட்ட கலாசார அடையாளங்களைக் கொண்ட உபதேசியக்குழுக்களை குறித்து நிற்கின்றது.

III. அரசின் உறுப்பினர்கள் பிரஜைகள் ஆவர். அந்தவகையில் தேசிய அரசின் உறுப்பினர்களாகவும் பிரஜைகள் கருதப்படுகின்றனர்.

IV. அரசொன்றினுள் அதனுடைய பிரஜைகளாக வாழும் வேறுபட்ட இனக்குழுக்களை இனத்துவம் குறித்து நிற்கின்றது.

V. இனக்குழுக்கள் பொதுவில் தமக்கேயுரிய சொந்த மொழி, மதம், கலாசாரம் என்பவற்றினைக் கொண்டிருப்பதுடன், வேறுபட்ட அடையாளங்களையும் கொண்டுள்ளனர். மொழி, மதம், கலாசாரம் என்பன இனக்குழுக்களினதும் தேசங்களினதும் அடையாளங்களை உருவாக்குகின்றன.

VI. ஒரு அரசொன்றுக்குள் பல இனக்குழுக்கள் தமக்கேயுரிய வேறுபட்ட சொந்த கலாசாரம், மொழி மற்றும் மத அடையாளங்களைக் கொண்டிருக்க முடியும். வேறுபட்ட இனத்துவ அடையாளக் குழுக்கள் பெரிய அரசியல் சமூகத்துடன் பிணைக்கப்படுகின்ற பொழுது அதனை தேசம் என்று அழைக்கின்றனர்.

VII. தேசத்துவம் என்ற சிந்தனையானது இனச்சமூகங்களின் வேறுபட்ட அடையாளங்களின் அரசியல் ஐக்கியத்தின் ஊடாக கட்டியெழுப்பப்படுகின்றது. அரசின் கடமை யாதெனில், பன்மைத்தன்மை கொண்ட இனச்சமூகங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருமைப்படுத்தப்பட்ட தேசத்தினைக் கட்டியெழுப்புவதாகும்.

VIII. பல இனக்குழுக்களின் வேறுபட்ட அடையாளங்களின் அடிப்படையில் தேசங்களை கட்டியெழுப்பியுள்ள அரசுகளை பல்லின அரசுகள் என அழைக்கின்றனர். இதற்கு இலங்கை, இந்தியா, பிரித்தானியா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றினை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

Department of Examinations

**முடிவுரை**

முடிவுரையில் பிரதான கலந்துரையாடலின் சுருக்கம் ஒன்றுடன் தேசம் மற்றும் அரசுகளின் ஸ்திரத்தன்மை, அரசியல் ஒருமைப்பாடு என்பவற்றுக்கு பல்லினத்தன்மை கொண்ட நவீன அரசுகளில் வேறுபட்ட இன சமூகங்களுக்கிடையில் தேசிய ஐக்கியம் காணப்படுவது மிகவும் முக்கியமாகும். தேசிய அரசுக்குள் இனப்பன்மைத்துவ அடிப்படையில் தோன்றும் பிரச்சினைகளுக்கு சமஷ்டி, அதிகாரப்பகிர்வு மற்றும் அதிகாரப் பன்முகப்படுத்தல் போன்ற அரசியலமைப்பு ரீதியான தீர்வுகளை வழங்கமுடியும்.

**குறிப்பு**

இலங்கை மற்றும் ஏனைய சமூகங்களில் அரசு, தேசம், இனத்துவம் மற்றும் தேசத்துவம் ஆகிய விடயங்களில் ஏற்பட்டுள்ள தற்கால வளர்ச்சி தொடர்பான விழிப்புணர்வு பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு தேவைப்படுகின்றது. அத்தகைய விழிப்புணர்வுகளை உதாரணங்களுடன் முன்வைக்கும் பரீட்சார்த்திகளுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

**வினா இலக்கம் 03 :**

**ஆட்சிமுறைக் கட்டமைப்புக்குள் அரசாங்கத்தின் பணிகளை விபரிக்குக.**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினா (a) அரசாங்கத்தின் தன்மை மற்றும் அதன் பணிகள், (b) ஒட்டுமொத்த ஆட்சி முறைக் கட்டமைப்புக்குள் அரசாங்கத்தின் பணிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் புரிதலை மதிப்பிட முற்படுகின்றது. பொதுவில் இவ்வினாவிற்கு விபரண விடையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும், பரீட்சார்த்திகள் பகுப்பாய்வு மற்றும் எண்ணக்கரு ரீதியான விடயங்களை முன்வைத்திருந்தால் மேலதிக புள்ளிகளை வழங்கலாம்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- அரசாங்கத்தினை வரையறுத்தல்
- அரசாங்கத்தின் பிரதான பணிகளை விளக்குதல்
- அரசாங்கத்தின் பணிகள் எவ்வாறு ஒழுங்கமைந்துள்ளன என்பதனை எடுத்துக்காட்டுதலும் கலந்துரையாடலும்

**அறிமுகம்**

அரசின் பிரதான அரசியல் நிறுவனம் அரசாங்கமாகும். அதுவே அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையிலான பிரதான இணைப்புப் பாலமாக காணப்படுகின்றது. ஆகவே, அரசாங்கம் என்ற சட்டகத்துக்குள் அது பல பரந்தளவிலான பணிகளை மேற்கொள்கின்றது.

**கலந்துரையாடல்**

(i) அரசாங்கத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடு ஆட்சிபுரிதலாகும். மரபுரீதியாக அரசாங்கத்தின் பணிகள் பிரதானமாக மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. அவை சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை சார்ந்த பணிகளாகும். ஆனால், இன்று அரசாங்கத்தின் பணிகளுக்கு பரந்த வரைவிலக்கணம் வழங்கப்படுவதுடன், அவை பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் என்ற வகையில் நீண்டு செல்கின்றது.

(ii) அரசாங்கத்தின் பணிகளை உள்ளக மற்றும் வெளியக பணிகள் என்ற அடிப்படையிலும் வகைப்படுத்த முடியும்.

(a) வெளிவாரிப் பணிகள்: தேசிய பாதுகாப்பினை உறுதி செய்தல் (ஆள்புல ஒருமைப்பாட்டினை பாதுகாத்தல், அரசியல் சுதந்திரத்தினைப் பாதுகாத்தல், அரசின் பௌதீக இருப்பினை உறுதி செய்தல்)

(b) தேசிய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்தல்: ( தேசத்தினுடைய சேமநலன், தேசிய விருப்பம் என்பவற்றினை உறுதி செய்தல் மற்றும் தேசிய அரசியல் கருத்தியலை பாதுகாத்தல் என்பன)

Department of Examinations

(c) உள்ளகப் பணிகள்: சட்டம் ஒழுங்கினைப் பாதுகாத்தல், சமூக நலன், சமூக முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவம், கல்வி மற்றும் கலாசாரப் பணிகள் என்பன அடங்கும்.

(iii) அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டே உள்ளக மற்றும் வெளியக செயற்பாடுகள் ஒழுங்கமைந்துள்ளன. இக்கட்டமைப்பு அமைச்சுக்கள், திணைக்களங்கள், பணியகம், நியாயசபைகள், மற்றும் பணிகளை ஆற்றுவதற்கான ஆளணியினையும் குறித்து நிற்கின்றது.

(iv) அரசாங்கத்தின் சார்பாக வேறுப்பட்ட சிறப்புப் பணிகளை ஆற்றுவதற்கு அரசாங்கத்திற்கு ஆளணி அவசியமாகும். அவர்கள் அரசாங்கத்தின் வேறுப்பட்ட பணிகள் தொடர்பாக சிறப்புத் தேர்ச்சியினைக் கொண்டிருப்பர். பணியகவமைப்பு இதற்கு ஒரு உதாரணமாகும்.

(v) மேற்கூறப்பட்ட மரபு ரீதியான பணிகளுக்கு அப்பால் அரசாங்கத்தின் சமூகப்பணிகளும் காணப்படுகின்றன. சமூகத்தில் ஒற்றுமையினை தக்கவைக்கும் நோக்கில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் உறுதிசெய்தல், சமூக சமாதானத்தினை பேணுதல், பொருளாதார அபிவிருத்தியினை ஊக்குவித்தல், சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்தல், சமூக நலன்களை வழங்குதல், பிரஜைகளுக்கு சமூக சேவைகளை வழங்குதல், குறிப்பாக சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகள், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியன அரசாங்கத்தின் பிரதானப் பணிகளாகும். இவை அனைத்தும் அரசாங்கத்தின் சமூகப் பணிகளாகும்.

(vi) அந்தவகையில், நவீன அரசாங்கம் பரந்துபட்ட பணிகளை ஆற்றுகின்றது. அது சமூக அரசியல் ஒழுங்கினைப் பேணுதல், நாட்டினையும் மக்களையும் வெளி எதிரிகளிடமிருந்து பாதுகாத்தல், பொது சேவைகளை வழங்குதல், பொருளாதார நிலைமைகளை முகாமை செய்தல், வருமானத்தினை மீள்பங்கீடு செய்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

Department of Examinations

**முடிவுரை**

பரந்தளவிலான பொறுப்புக்களின் காரணமாக நவீன அரசாங்கத்தின் வகிபங்கு தெளிவற்றதாக காணப்படுகின்றது. கைத்தொழில் முதலாளித்துவத்தின் தோற்றம், நலன்புரி அரசு, சனத்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கம், சமூகத்தில் பொருளாதார பணிகள் விஸ்தரிக்கப்பட்டமை, அரசுகளுக்கிடையிலான நெருங்கிய தொடர்பு, அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் மோதல்கள் ஆகியன அரசாங்கத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பணிகள் அதிகரிப்பதற்கு பிரதான காரணிகளாக அமைந்தன. ஆகையால், சில அரசாங்கங்கள் தனியார் துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து பங்குடமையில் செயற்படுகின்றன.

**வினா இலக்கம் 04 :**

**ஜனநாயக சமூகமொன்றில் சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியன ஏன் முக்கியம் என்பதனை விளக்குக.**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினாவானது (a) நவீன ஜனநாயக சமூகங்களில் சுதந்திரம், சமத்துவம் தொடர்பான அறிவு, (b) ஜனநாயகத்திற்கு அவை ஏன் முக்கியம் என்பன தொடர்பான பரீட்சார்த்திகளின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டுத் திறன்களை அளவிடுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- சமத்துவம் மற்றும் சுதந்திரத்தினை வரையறை செய்தல்
- சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியன ஏன் மனிதர்களுக்கு அவசியம் என்பதனை எடுத்துக்காட்டல்
- ஜனநாயக அரசாங்கங்கள் எவ்வாறு பிரஜைகளின் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தினை உறுதி செய்வதற்கு எத்தனிக்கின்றன என்பதனை எடுத்துக்காட்டுதல்

Department of Examinations

**அறிமுகம்**

ஜனநாயக ஆட்சி முறைக்கு சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியன அடிப்படைத் தத்துவங்களாக காணப்படுகின்றன. அரசின் உறுப்பினர் என்ற வகையில் அல்லது அரசியல் சமூகமொன்றின் உறுப்பினர் என்ற வகையில் அவை பிரஜைகள் அனுபவிக்க விரும்பும் அடிப்படை உரிமைகளாகும். பிரஜைகளுக்கு சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஏனைய உரிமைகளை உறுதி செய்யும் ஓர் அரசியல் முறைமையே ஜனநாயகமாகும். எந்தவொரு சமூகத்திலும் பிரஜைகளின் அரசியல் வாழ்க்கையின் தரத்தினை அவர்கள் அனுபவிக்கும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தினைக் கொண்டு வினைத்திறன் மிக்க வகையில் மதிப்பிட முடியும்.

**கலந்துரையாடல்**

(i) தனி நபடீகள் சமாதான வழிமுறையிலான வாழ்க்கையினை கொண்டு நடாத்துவதற்கும், அதேவேளை தனிநபர்கள் தமது சிந்திக்கும் மற்றும் செயற்படும் சுதந்திரத்தினை பாதுகாக்கவும் சுதந்திரம் அத்தியாவசியமாகும். சுதந்திரம் என்பது ஒரு நபர் அச்சமின்றி வெளிக் கட்டுப்பாடுகள் இன்றி, ஏனையோருக்கு தீங்கு விளைவிக்காது வாழ்வதற்கான இயலுமையினை வழங்குகின்றது.

(ii) ஜனநாயகமொன்றில் தனிமனித சுதந்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால், அது சட்ட, ஒழுக்க மற்றும் சமூக கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. ஏனையோருக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சுதந்திரத்தினை பயன்படுத்த முடியாது. அதேபோல், சுதந்திரத்தினை பயன்படுத்தி தனிநபர்கள் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கோ அல்லது ஏனையோரின் சுதந்திரத்தினை மறுக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கோ அனுமதிக்கப்படுவதில்லை.

(iii) பிரஜைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது ஜனநாயக அரசாங்கத்தின் கடமையாகும். ஜனநாயகமொன்றில் அரசாங்கம் பிரஜைகளின் உரிமைகளை உறுதி செய்வதற்கு பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவையாவன:

(a) அரசியலமைப்பில் உரிமைகள் மசோதாவினை உள்வாங்குதல்.
(b) சட்டத்தின் ஆட்சி
(c) பொருளாதார நீதி
(d) நீதித்துறைச் சுதந்திரம்
(e) ஊடக சுதந்திரம்

(iv) சமத்துவம் என்ற தத்துவமானது சமூகத்தில் உள்ள பிரஜைகள் அனைவரும் சமமானவர்கள் என்பதனை வலியுறுத்துகின்றது. ஆகவே, யாவரும் சமமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். இத்தத்துவம் தோற்றம் பெறுவதற்கான காரணம் அதிகாரம், வாய்ப்புக்கள், சமூக அந்தஸ்து மற்றும் செல்வத்தினை அணுகுதல் என்ற அடிப்படையில் தனிநபர்கள் மத்தியிலும் குழுக்களுக்கிடையிலும் அசமத்துவம் காணப்படுவதாகும். அசமத்துவமானது பாகுபாடு, அநீதி மற்றும் மனித கௌரவத்தினை அபகரித்தல் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்கின்றது.

(v) சமூகத்தில் சமத்துவத்தினை உறுதி செய்வதற்கு பின்வரும் நிபந்தனைகளை அடைவது அவசியமாகும்.

(a) ஏனையோர் சமத்துவமின்மையினை அனுபவிக்கும் போது சிலருக்கு விசேட கவனிப்பு இருக்ககூடாது
(b) யாவருக்கும் சமமான வாய்ப்பு காணப்படுதல்
(c) யாவருக்கும் சமமான உரிமைகள் காணப்படுதல்

(vi) சுதந்திரம் மற்றும் சமத்துவத்துவத்திற்கிடையிலான உறவு

(a) அவை பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. அவை சமூகத்திலுள்ள சகலருக்கும் கிடைக்கப்பெறல் வேண்டும். சுதந்திரம் என்பது பிரஜைகள் அச்சமின்றி வாழ்வதனையும் மனித உரிமைகளை அனுபவிப்பதனையும் குறித்து நிற்கின்றது. ஆகவே, ஜனநாயக சமூகமொன்றில், சமூகத்தின் சகல பிரஜைகளும் எந்தவிதமான வேறுபாடுகளுமின்றி, குறிப்பாக, பால்நிலை, சமூக வகுப்பு, சாதி, செல்வம் அல்லது அந்தஸ்து வேறுபாடுகள் இன்றி உரிமைகளை அனுவிக்க சுதந்திரம் உண்டு.

(b) ஆனால் பொருளாதார சமத்துவத்தினை உருவாக்கும்போது அது சிலரின் சுதந்திரத்தினைப் பாதிக்கலாம். (உதாரணமாக ஏழை / வறுமையில் வாழும் சமூக மக்களின் சமூக நல வேலைத்திட்டங்களுக்காக செல்வந்தர்களிடம் அதிக வரிப்பணத்தினை அறவிடல்). ஆயினும், அத்தகைய கொள்கைகளும் சமூகத்தில் பெரியளவிலான சுதந்திரம் மற்றும் சமத்துவத்தினை உறுதி செய்ய வேண்டும்.

Department of Examinations

(c) ஆனால், ஜனநாயகத்திற்கு சமத்துவமும் சுதந்திரமும் அவசியமானவைகளாகும். ஒன்றில்லாமல் மற்றொன்று அர்த்தமற்றதாகும். அவை சிந்தனைசெய்யும் சுதந்திரம், கருத்துவெளியீட்டு சுதந்திரம், ஒன்றுகூடுதல் மற்றும் மனசாட்சியினைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் என்பவற்றினை உள்ளடக்குகின்றது. இவை அனைத்தும் சகல பிரஜைகளுக்கும் எத்தகைய வேறுபாடுகளுமின்றி கிடைக்கப்பெற வேண்டும்.

**முடிவுரை**

இவ்விரு எண்ணக்கருக்களும் மானிடமகிழ்ச்சி மற்றும் தேவைகள் ஆகியவற்றை அடைந்துகொள்வதனை தடுக்கும் இரு சமூகசூழ்நிலைகளையும் வலியுறுத்துகின்றன. அவை யாதெனில், சுதந்திரமின்மை மற்றும் சமத்துவமாகும். அடிமைத்தனம், அடக்குமுறை, சுரண்டல் மற்றும் உரிமைப்பறிப்பு என்பன சுதந்திரமின்மை மற்றும் அசமத்துவத்தினை உருவாக்குகின்றன. ஜனநாயகம் இந்நிலையினை சரிசெய்ய எத்தனிக்கின்றது. ஆயினும், ஜனநாயகம் மாத்திரம் தனிநபர்களின் முழு அளவிலான சுதந்திரத்தையும் சமத்துவத்தினையும் உறுதி செய்ய முடியாது. அரசியல் ஜனநாயகம் காணப்படும் சூழ்நிலையில் நிலவும் நியாயமற்ற சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள்கூட சுதந்திரம் மற்றும் சமத்துவத்தினை கட்டுப்படுத்த முடியும். உண்மையில், முழு அளவிலான சுதந்திரத்தினை உறுதி செய்வதற்கு பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் மிகவும் முக்கியமானவைகளாகும்

**குறிப்பு**

(இது ஒரு மாதிரி முடிவுரை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வாறான முடிவுரையினை எழுதியிருக்க மாட்டார்கள். ஆயினும் இத்தகையதொரு முடிவுரை காணப்படுமாயின் அதற்கு ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

Department of Examinations

# பகுதி-C

**வினா இலக்கம் 05 :**

(i) **கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்களின் அரசியல் விளைவுகள்**

(ii) **இலங்கையில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இடதுசாரி இயக்கங்கள் வழங்கிய அரசியல் பங்களிப்பு**

(iii) **டொனமூர் சீர்திருத்தத்திற்கு வித்திட்ட பின்னணிக் காரணிகள்**

(iv) **காலனித்துவ காலத்தில் வளர்ச்சியடைந்த இனத்துவ அரசியலின் போக்குகள்**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

காலனித்துவ காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற அரசியல் நிலைமாற்றத்தின் வேறுபட்ட பார்வைகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை மதிப்பிட இவ்வினா முற்படுகின்றது. விவரண ரீதியான விடையே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும், மதிப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு ரீதியான விடயங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

Department of Examinations

**5. (i) கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்களின் அரசியல் விளைவுகள்**

**குறிப்பு**

கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்கள் தொடர்பாக வெறுமனே விவரண ரீதியான விடைகளுக்கு முழு அளவிலான புள்ளிகள் வழங்கப்படக்கூடாது. விடையானது குறிப்பாக அரசியல் விளைவுகள் தொடர்பானதாக அமைதல் வேண்டும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- கோல்புரூக் - கமரன் சீர்திருத்த முன்மொழிவுகள் எவை என விவரித்தல்
- அரசியல் - நிர்வாக முன்மொழிவுகள் குறித்த சுருக்கம் ஒன்றினை வழங்குதல்
- அவற்றின் அரசியல் விளைவுகளை விளக்குதல்

**அறிமுகம்**

1915ம் ஆண்டு இலங்கை முழுவதனையும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த பின்னர் முழு அளவிலான அரசியல், நிர்வாக மற்றும் சட்ட மறுசீரமைப்புகளை நாட்டில் அறிமுகம் செய்வதற்கு எடுத்த முதலாவது நடவடிக்கையாக கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம் காணப்படுகின்றது. இவ்வாணைக்குழு இலங்கையினை ஒரு ஒழுங்குக்குட்பட்ட பிரித்தானிய காலனித்துவ நாடாக நிலைமாற்றம் செய்யவேண்டும் என எதிர்பார்த்தது. ஆகவே, ஆணைக்குழுவின் சிபாரிசுகள் காலனித்துவ இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக பரப்புகளில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தின.

**கலந்துரையாடல்**

(i) நாட்டினை நிர்வாக ரீதியாக ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த சட்ட மற்றும் நீதி முறைமையினை அறிமுகப்படுத்தியதன் ஊடாக எதிர்கால இலங்கைக்கான மத்தியமயப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசமுறைமை ஒன்றுக்கு அடித்தளமிட்டது.

(ii) நிர்வாக மத்தியமயப்படுத்தல் ஊடாக நாட்டில் அரசியல் ஐக்கியத்தினை ஏற்படுத்தி இன அடிப்படையிலான நிர்வாக அலகுகளை முடிவுக்கு கொண்டு வருவது கோல்புரூக் – கமரன் சீர்திருத்த முன்மொழிவுகளின் ஒரு பகுதியாக காணப்பட்டது. அவர்கள் மரபுரீதியாக காணப்பட்ட இனத்துவ அடையாள அடிப்படையிலான நிர்வாக அலகுகளான கரையோரச் சிங்களவர், கண்டியச் சிங்களவர் மற்றும் தமிழர் பிரதேசம் என்பற்றினை இல்லாது செய்து அதற்குப் பதிலாக 5 புதிய நிர்வாக மாகாணங்களை உருவாக்கினர்.

(iii) கமரனுடைய சட்ட மற்றும் நீதி சார் முன்மொழிவுகள் நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாகத்தினை ஒருமைப்படுத்தும் நோக்கத்திற்கு ஒப்பான விளைவுகளை எதிர்பார்த்தது. கமரனுடைய நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு சிபாரிசுகள் 1833ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நீதி பட்டயத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. நாட்டினை ஐக்கியப்படுத்த அல்லது ஒருமைப்படுத்த வேண்டுமாயின் சகல வகுப்பினைச் சேர்ந்த மக்களுக்கும் சட்டம் ஒரே மாதிரி ஒருமைப்படுத்தப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என கமரன் வாதிட்டார்.

(iv) நாட்டில் படிப்படியாக பொறுப்புக்கூறும் அரசாங்கம் ஒன்றுக்கான அடித்தளத்தினை இட்டது. குறிப்பாக, ஆளுனர் காலனித்துவ நிர்வாகத்தினை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் சட்ட மற்றும் நிறைவேற்று சபைகளைத் தாபித்து காலனித்துவ ஆளுனரிடம் காணப்பட்ட எதேச்சதிகாரங்களைக் குறைப்பதற்கு வழிசெய்தது.

(v) பிற்பட்டக் காலத்தில் பிரதிநிதித்துவ அரசாங்கம் உருவாகுவதற்கான ஆரம்ப செயன்முறைகளை ஆரம்பித்தது. குறிப்பாக, 15 பேருடன் கூடிய சட்ட சபையினை தாபித்தமையானது இலங்கையினுடைய பாராளுமன்ற முறைக்கான நீண்ட பயணத்தினை நோக்கிய செயற்பாட்டுக்கான அடித்தளத்தினை இட்டது.

(vi) காலனித்துவ அரசாங்கத்தின் சட்டவாக்கச் செயன்முறையில் உள்ளூர் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கான கதவுகளைத் திறந்தது. சட்ட சபையில் மூன்று உள்ளூர் பிரிதிநிதிகள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் இது சாத்தியமாகியது. கரையோரச் சிங்களவர்கள், பறங்கியர்கள் மற்றும் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஆளுனர் அவர்களை நியமித்தார். இது காலனித்துவ சட்ட சபையில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்துக்கான ஆரம்பமாக அமைந்தது.

(vii) காலனித்துவ சிவில் நிர்வாகத்தினை (சேவையினை) உள்ளூர் பிரதிநிதிகளுக்கும் திறந்துவிட்டமை மிக முக்கியமான சிபாரிசுகளில் ஒன்றாக அமைந்ததுடன், அது படிப்படியாக இலங்கையின் கல்விகற்றோர் காலனித்துவ நிர்வாகத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்கியது. கோல்புரூக் ஆணைக்குழு முற்றிலும் பிரித்தானிய குணாம்சங்களைக் கொண்டிருந்த காலனித்துவ நிர்வாகத்தில் மாற்றங்களை செய்து உள்ளூர் பங்கேற்புக்கு வாய்ப்பு வழங்கியது.

Department of Examinations

### முடிவுரை

கோல்புரூக் - கமரன் சிபாரிசுகள் இலங்கையில் நிர்வாக மற்றும் அரசியலமைப்பு மாற்றங்களை செய்து பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியினை சக்திப்படுத்துவதனை நோக்காகக் கொண்டமைந்தது. இவை காலனித்துவ பொருளாதாரம், காலனித்துவக் கல்வி, மற்றும் காலனித்துவ நலன்களை அடையும் வகையில் சமூக மாற்றங்களையும் மேற்கொண்டன. அதேவேளை, இச்சீர்த்திருத்தங்கள் பல எதிர்பாராத நேர்க்கணிய விளைவுகளையும் ஏற்படுத்தின. அவற்றை நீண்ட கால நோக்கில் பார்ப்பதன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

### 5. (ii) இலங்கையில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இடதுசாரி இயக்கங்கள் வழங்கிய அரசியல் பங்களிப்பு

Department of Examinations

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- 1930களில் இலங்கையில் இடதுசாரி இயக்கங்களின் தோற்றத்தினை எடுத்துக்காட்டல்
- காலனித்துவக் காலத்தில் அவற்றினுடைய பிரதான அரசியல் செயற்பாடுகளை விபரித்தல்
- இடதுசாரிகளால் வழங்கப்பட்ட அரசியல் பங்களிப்பினை மதிப்பிடல்

### அறிமுகம்

காலனித்துவ ஆட்சியின் இறுதிக் காலத்தில் இலங்கையில் வளர்ச்சிபெற்ற மிக முக்கியமான சமூக மற்றும் அரசியல் இயக்கமாக இடதுசாரி இயக்கம் காணப்பட்டது. அதனுடைய தோற்றத்தின் பின்னணியில் தொழிலாளர் வகுப்புக்கள்,தேசிய இயக்கங்கள், ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிரான சிவில் அமைப்புக்கள் மற்றும் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் என்பன பங்களிப்பு செய்தன. இவ்வனைத்து அமைப்புகளிலும் இடதுசாரி இயக்கம் மாத்திரமே மிக தீவிரமான அரசியல் நிகழ்ச்சிநிரலை முன்வைத்தது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இடதுசாரிகளின் பங்களிப்பு குறித்து ஆராயும்போது இப்பின்னணியினை விளங்கிக்கொள்ளுதல் மிக முக்கியமாகும்.

### கலந்துரையாடல்

(i) இலங்கையினுடைய இடதுசாரி இயக்கங்கள் 1930களின் ஆரம்பத்தில் பரந்துபட்ட முற்போக்கு இயக்கமாக தோற்றம் பெற்றன.

(ii) 1935 ஆம் ஆண்டு LSSP கட்சி உருவாகுவதற்கு முன்னர், அதனுடைய தலைவர்கள் தொழிற்சங்க செயற்பாடுகள், சமூக சேவைகள் மற்றும் காலனித்துவத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

(iii) கம்யூனிசக் கட்சியானது லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து பிரிந்து வந்த தரப்பினரால் 1943ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

(iv) இடதுசாரி கட்சிகளான LSSP மற்றும் கம்யூனிச கட்சி ஆகிய இரண்டும் தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொழிலாளர் வகுப்பினை அணிதிரட்டுவதில் / ஒழுங்குபடுத்துவதில் செயலூக்கத்துடன் செயற்பட்டன.

(v) இலங்கைக்கு பூரண சுதந்திரத்தினை கோரியதுடன் காலனித்துவத்திற்கு எதிரான பல செயற்பாடுகளை முன்னெடுத்த மிக முக்கியமான இயக்கமாக இடதுசாரி இயக்கம் காணப்பட்டது.

(vi) இடதுசாரி இயக்கங்கள் சமூக சமத்துவத்திற்காக மிகவும் துடிப்புடன் குரல் கொடுத்ததுடன், சாதி அடிப்படையிலான சமூக அடக்குமுறை, சமூகத்தில் அந்நியப்படுத்தப்பட்ட, வறுமையில் வாடும் மக்களுக்காக அரசியல் ரீதியாக குரல் கொடுப்பதற்கும் முன்னின்று செயற்பட்டன.

(vii) இக்காலத்தில் இடதுசாரி கட்சிகள் சமூக நலக் கொள்கைகளை ஊக்குவிப்பதில் முன்னோடியாக காணப்பட்டதுடன், பிற்பட்டகாலத்தில் சமூக நிலைமாற்றத்திற்கு பெரியளவில் பங்களிப்பு செய்த சமூகநல அரசு உருவாகுவதற்கு அடித்தளமிட்டன.

(viii) சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டு வந்து அவர்களுக்கு சமஉரிமைகள் அவசியம் என்பதனை நியாயப்படுத்திய முதலாவது அரசியல் இயக்கம் இடதுசாரி இயக்கமாகும்.

(ix) சாதாரண மக்கள் தமது சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை விளங்கிக் கொள்வதற்கு அவசியமான விழிப்புணர்வினை இடதுசாரி கட்சிகள் வழங்கியதுடன், அவர்களுக்காக அரசியல் ரீதியாக குரல்கொடுத்து சாதாரண மக்களை முக்கியமான அரசியல் சக்தியாக மாற்றின.

**முடிவுரை**

தீவிர அரசியல் நிகழச்சிநிரல் ஒன்றின் மூலம் இலங்கையினுடைய சமூக மற்றும் அரசியல் ஜனநாயக மயமாக்க செயன்முறைக்கு முன்னோடியான பங்களிப்பினை இடதுசாரி இயக்கங்கள் வழங்கின என்ற அவதானிப்பினை முடிவுரையில் முன்வைக்க முடியும்.

Department of Examinations

**5. (iii) டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு வித்திட்ட பின்னணிக் காரணிகள்**

**குறிப்பு**

இங்கு எதிர்பார்க்கப்படுவது டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவரண விடையல்ல. டொனமூர் ஆணைக்குழு தாபிக்கப்படுவதற்கு பின்னணியாக அமைந்த காரணிகள் ஆகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம் எதனை மையப்படுத்தியதாக அமைந்தது என்பதனை சுருக்கமாக அறிமுகம் செய்தல்
- அப்போது காலனித்துவ இலங்கையில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலையின் தன்மையினை விவரித்தல்
- ஆணைக்குழுவினை நியப்பதற்கான பின்னணிக் காரணங்களை விவரித்தல்

Department of Examinations

**அறிமுகம்**

டொனமூர் ஆணைக்குழு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் காணப்பட்ட இலங்கையினுடைய அரசாங்க முறையினை மறுசீரமைப்பதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டது. அது வழங்கிய சிபாரிசுகள் அரசியலமைப்பிலும் அரசாங்க முறையிலும் பாரிய மாற்றங்களுக்கு வித்திட்டன.

**கலந்துரையாடல்**

(i) மனிங் அரசியலமைப்பின் குறைபாடுகள்:

(a) அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தெளிவு காணப்படாமை. சட்ட சபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக காணப்பட்டபோதும் அவர்களுக்கு அதிகாரங்கள் காணப்படவில்லை. சகல அதிகாரங்களும் சட்ட சபையில் சிறுபான்மையாக இருந்த உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்களிடமே காணப்பட்டது.

(b) உள்ளூர் பிரதிநிதிகள் நிர்வாக விடயங்களில் தலையிடுகின்றார்கள் என்ற ஆளுனரின் குற்றச்சாட்டு.

(ii) மனிங் அரசியலமைப்பின் குறைப்பாடுகள் காரணமாக உள்ளூர் அரசியல் தலைவர்கள் புதிய அரசியலமைப்பிற்கான கோரிக்கையினை முன்வைத்தனர். அவர்கள் சட்ட சபையில் பெரும்பான்யையினைக் கொண்டிருந்தமையால் நிர்வாக விடயங்களில் பெரியளவிலான வகிபங்கினைக் கோரினர்.

(iii) ஆளுனரின் கீழ் காணப்பட்ட நிதிக்குழுவானது மிதமிஞ்சிய நிதிசார் அதிகாரங்களைக் கொண்டிருந்தமையானது சட்ட மற்றும் நிறைவேற்று சபைகளை பலவீனப்படுத்தியது.

(iv) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை விஸ்தரிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்.

(v) அரசியலமைப்பு சீர்திருத்தம் கோரி சிவில் மற்றும் அரசியல் அமைப்புக்கள் கோரிக்கைகளை முன்வைத்தமை. உதாரணமாக 1926ம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளை முன்வைத்தமை. இந்த முன்மொழிவுகள் காலனித்துவ நிர்வாகத்தில் உள்ளூர் பிரதிநிதிகளுக்கு அதிக அதிகாரங்களை வலியுறுத்தியது.

(vi) பிரித்தானியாவில் புதிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் கீழ் காலனித்துவ கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றம்: முதலாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் உள்ளூர் அரசியல் உயர் குழாமினருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் காலனித்துவக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டமை, மற்றும் இந்தியாவில் முழு அளவிலான சுதந்திரத்தினைக்கோரி இந்திய தேசியக் காங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமையும் பிரத்தானிய அரசாங்கத்தின் காலனித்துவக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட காரணமாக அமைந்தது. இப்பின்னணியிலேயே, 1927ம் ஆண்டு பதவிக்கு வந்த தொழிற்கட்சியின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான அம்சமாக இது காணப்பட்டது.

(vii) இந்திய சீர்திருத்த இயக்கங்களின் தாக்கம்: இக்காலத்தில் இந்தியாவினுடைய சுதந்திர இயக்கமானது ஆயுதபோராட்ட கட்டத்தை அடைந்திருந்தது. அது இலங்கையினுடைய தேசிய இயக்கத்திலும் தாக்கம் செலுத்தும் என்ற அச்சம் காணப்பட்டது. ஆகவே, உள்ளூர் உயர் குழாமினருக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது காலனித்துவ ஆட்சிக்கான சிறந்ததொரு கொள்கையாகக் கருதப்பட்டது.

**முடிவுரை**

1927ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு தாபிக்கப்படுவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. சில காரணிகள் அப்போது இலங்கையில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகளுடன் தொடர்புடையவை. ஏனைய சில காரணிகள் பிரித்தானிய காலனித்துவக் கொள்கைகளுடன் தொடர்புபட்டிருந்தன. இதன் இறுதி விளைவு யாதெனில், சுதந்திரத்திற்கு முன்னரான காலனித்துவ இலங்கை சூழ்நிலையில் பாரிய அரசியல் மேம்பாடு ஏற்பட்டமையாகும்.

Department of Examinations

## 5. (iv) காலனித்துவ காலத்தில் வளர்ச்சியடைந்த இனத்துவ அரசியலின் போக்குகள்

**அறிமுகம்**

காலனித்துவ இலங்கையின் நவீன அரசியல் வளர்ச்சியில் இனத்துவ அரசியல் ஒரு விசேட போக்காக காணப்பட்டுள்ளது. இச்செயன்முறை இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தகாலத்தில் ஆரம்பித்தது. ஆயினும் அதனுடைய தோற்றுவாய் அதற்கு முந்திய நூற்றாண்டைச் சேர்ந்தது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் தோற்றம் பெற்ற புதிய உயர்குழாம் வகுப்பினர், காலனித்துவ சட்ட சபையில் அதிகரித்த பிரதிநிதித்துவம் மற்றும் உயர்குழாம் மத்தியில் பிரதிநிதித்துவத்துக்கான போட்டி அதிகரித்தமை என்பன இனத்துவ அரசியலின் வளர்ச்சியின் பின்னணியில் பாதிப்புச் செலுத்தின.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- இனத்துவ அரசியலுக்கு வித்திட்ட கலாசார மற்றும் மத இயக்கங்கள் தொடர்பான சுருக்க அறிமுகம்
- இனத்துவ அரசியலை வரையறை செய்தல்
- இனத்துவ அரசியலின் வளர்ச்சியினை விவரித்தல்

**கலந்துரையாடல்**

(i) கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக/மத மாற்றத்திற்கு பதிலளிக்கும் வகையில் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் சமூகத்தில் தோற்றம் பெற்றமையானது இனத்துவ அரசியலுக்கான முன்னோடியாக அமைந்தது. இவை 19ம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தோற்றம் பெற்றன. இவை வேறுப்பட்ட சமூகங்களுக்கு கலாசாரத்தினை அடிப்படையாகக் கொண்ட குழு அடையாளத்தினை வழங்கின.

(ii) இந்த மதமறுமலர்ச்சி இயக்கங்களின் பின்புலத்தில் அல்லது இவற்றுக்கு எதிராக புகழ்ப்பெற்ற சமூக இயக்கங்களாக தேசிய இயக்கங்கள் வளர்ச்சி பெற்றமை.

(iii) சட்ட சபைக்கு இனவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இனத்துவ அரசியல் எழுச்சி பெற்றமை: அக்காலத்தில் இனவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதெனில், ஒவ்வொரு இனச் சமூகமும் வேறுப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் கலாசார தேவைகளைக் கொண்டிருந்தன – ஆகவே, வேறுப்பட்ட அரசியல் அடையாளங்களை சட்டசபையில் அங்கீகரிப்பதன் மூலம் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்ற எதிர்பார்ப்பாகும்.

(iv) சட்ட சபைக்கான இனவாரி பிரதிநிதித்துவத்துக்கான அடிப்படையாக ஒவ்வொரு இனச் சமூகத்தினதும் விசேட இனத்துவ அடையாளம் கருத்தில் கொள்ளப்பட்டது.

(v) 1919ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரசில் ஏற்பட்ட பிளவு சிங்கள மற்றும் தமிழ் அரசியல் உயர்குழாமினர் மத்தியில் தனித்தனி அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு வழிசெய்தமை.

(vi) டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் மூலம் இனவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டன. டொனமூர் ஆணைக்குழு இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை நாட்டின் ஐக்கியம் மற்றும் வளர்ச்சிக்கு தடையான ஒன்றாக விமர்சித்ததுடன் அதனை புற்றுநோய்க்கு சமனாக ஒப்பிட்டது.

(vii) 1936ம்ஆண்டு தனிச்சிங்கள அமைச்சர்கள்சபை உருவாக்கப்பட்டமை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் சமபிரதிநிதித்துவத்திற்கான அல்லது சமநிலையான பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்கைகள் எழுச்சிப்பெற வழிசெய்தது.

(viii) ஒட்டுமொத்தத்தில் இவை அனைத்தும் இனத்துவ அடையாளம் மற்றும் இனத்துவ அரசியல் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் எழுச்சிபெற வழி செய்தன.

(ix) இடதுசாரி கட்சிகள் மாத்திரமே இனத்துவ அரசியலுக்கு எதிராக பிரசாரம் செய்ததுடன், சிறுபான்மை இனங்களின் அரசியல் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தன.

Department of Examinations

### முடிவுரை

இனத்துவ அரசியல் என்பது காலனித்துவ இலங்கையின் நவீனமயமாக்கம் மற்றும் ஜனநாயகமயமாக்கத்தின் வெளிப்பாடாகும். அது பகுதியளவில் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான பதிலிறுப்பாகவும் காணப்பட்டது. மறுபுறமாக, காலனித்துவ ஆட்சியாளர்களும் தமது பிரித்தாளும் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக இனத்துவ அரசியலை ஊக்குவித்தனர். எவ்வாறாயினும், இதனுடைய உடனடி விளைவு யாதெனில், இலங்கையின் தேசிய இயக்கங்கள் பின்னர் இனத்துவ அரசியல் இயக்கங்களாக வளர்ச்சிப்பெற்றமையாகும்.

**வினா இலக்கம் 06 :**

**1972ம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு வித்திட்ட காரணிகளை பரிசீலனை செய்க.**

**(20 புள்ளிகள் )**

Department of Examinations

### நோக்கம்

இவ்வினா எத்தகைய சூழமைவில் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது மற்றும் அது உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை மதிப்பிட முற்படுகின்றது.

### விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

- சுதந்திரத்திற்குப் பின்னர் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டு சென்ற சூழமைவினை சுருக்கமாக விளக்குதல்
- சோல்பரி அரசியல் திட்டத்திற்கு எதிரான விமர்சனங்கள் மற்றும் அவை யாரால் முன்வைக்கப்பட்டன என்பதனை விவரித்தல்
- 1972ம் ஆண்டுக்கு முன்னர் சோல்பரி அரசியல் அமைப்பினை திருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விளக்குதல்.
- புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு 1970களில் காணப்பட்ட அரசியல் சூழமைவினை விளக்குதல்.

### அறிமுகம்

அறிமுகத்தில் முதலாம் குடியரசு அரசியலமைப்பு எத்தகைய பின்புலத்தில் உருவாக்கப்பட்டது என்பதனைக் குறிப்பிட முடியும். உதாரணமாக, சோல்பரி அரசியலமைப்பு மீதான அதிருப்தி, அது முழு அளவிலான சுதந்திரத்தினை வழங்காமை என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆகையால், சோல்பரி அரசியலமைப்பு மீது சிங்கள தேசியசக்திகள் / இயக்கங்கள் மற்றும் இடதுசாரிகள் விமர்சனங்களை முன்வைத்ததுடன் அவர்கள் மத்தியில் புதிய அரசியலமைப்புக்கான பிரசாரம் எழுச்சிப்பெற்றது. அத்துடன், அரசியல் சுதந்திரத்தினை முழுமையானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்ற வேண்டும் என்ற தாகமும் அவர்களிடம் காணப்பட்டது. இலங்கையில் தோற்றம் பெற்ற பின்-காலனித்துவ தேசியவாதமும் புதிய அரசியலமைப்பு உருவாகுவதற்கு பங்களிப்பு செய்தது.

**கலந்துரையாடல்**

(i) காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் எழுச்சிப்பெற்ற (சுதந்திரத்திற்குப் பின்னரான) காலனித்துவம் அற்றுப்போகும் ஒரு சூழமைவே 1972ம் ஆண்டு அரசியலமைப்பு உருவாகுதற்கு காரணமாக அமைந்தது என்பதனை விளங்கிக்கொள்வது முக்கியமாகும். சோல்பரி அரசியலமைப்பு காலனித்துவ ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டு நாடு சுதந்திரம் பெறும்போது இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டது. அது பிரித்தானிய அரசியலமைப்பு மாதிரியினை பின்பற்றியது. ஆகவே, இலங்கையின் தேசியவாதிகளும் இடதுசாரிகளும் வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியில் இருந்து விடுபட்ட புதியதொரு அரசியலமைப்பினை வேண்டிநின்றனர்.

(ii) சோல்பரி அரசியலமைப்புக்கு எதிராக சிங்கள தேசியவாதிகளும் இடதுசாரி சக்திகளும் பின்வரும் விடயங்களை வலியுறுத்தினர். சோல்பரி அரசியலமைப்பு இலங்கைக்கு முழுமையற்ற அரசியல் சுதந்திரத்தினையும் இறைமையற்ற பாராளுமன்றத்தினையும் வழங்கியது. பிரித்தானிய முடியே தொடர்ந்தும் அரசின் தலைவராக காணப்பட்டார். செனட் இலங்கைக்கு பொருத்தமானதல்ல மற்றும் பிரிவிக்கவுன்சில் இலங்கையின் மேலானதும் முடிவானதுமான நீதிமன்றமாக இருக்ககூடாது போன்ற கருத்துக்களை முன்வைத்தனர்.

(iii) இடதுசாரிகள் குறிப்பாக லங்கா சமசமாஜக்கட்சி இலங்கை ஒரு குடியரசாக மாறவேண்டும், அதன் அரசியலமைப்பு சுயாதீனத் தன்மை கொண்டதாகவும் உள்நாட்டில் உருவாக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என முன்வைத்த வாதம்.

(iv) சோல்பரி அரசியலமைப்பினை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட கடந்தகால நடவடிக்கைகள்– குறிப்பாக 1957ம் ண்டு ஸ்தாபிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு. இக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் ஒரு உடன்பாடு காணப்பட்டது. அது (a) இலங்கை ஒரு குடியரசாக மாற வேண்டும்,(b) அடிப்படை உரிமைகள் அத்தியாயம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதாகும். ஆயினும், இக்குழுவின் முன்மொழிவுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக எடுக்கப்படவில்லை.

(v) 1965ஆண்டு பிறிதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றின் ஊடாக சோல்பரி அரசியலமைப்பினை திருத்தி அதன்மூலம் இலங்கையினை குடியரசாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட்டன. ஆயினும், எதிர்கட்சிகள் முற்றிலும் புதியதொரு அரசியலமைப்பினை முன்மொழிந்தமையால் அம்முயற்சி சாத்தியமாகவில்லை.

(vi) சோல்பரி அரசியலமைப்பின் கீழ்காணப்பட்ட பாராளுமன்றம் சட்ட இறைமையினைக் கொண்டிருக்கவில்லை என்ற விமர்சனம் காணப்பட்டது. உதாணரமாக, இலங்கை பாராளுமன்றம் சோல்பரி அரசியலமைப்பினை மாற்றுவதற்கு, திருத்துவதற்கு, புதிய அரசியலமைப்பு ஒன்றினை ஏற்றுக்கொள்வதற்கு தெளிவான அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை.

(vii) 1960களின் இறுதிப்பகுதியில் இலங்கை சமூகத்தில் ஒரு பலமான கருத்து எழுச்சி பெற்றது. அது (a) முழு சுதந்திரத்தினையும் அடையும் வகையிலான புதிய அரசியலமைப்பு, (b) சுயாதீனதன்மை கொண்ட இலங்கையர்களால் உருவாக்கப்படும் அரசியலமைப்பு, (c) இலங்கையினை ஒரு குடியரசாக மாற்றுதல் என்பனவாகும்.

Department of Examinations

(viii) 1970ம் ஆண்டு தேர்தல் கூட்டணியினை அமைத்த SLFP, LSSP மற்றும் கம்யூனிசக் கட்சி ஆகியன அதே வருடம் ஜூலை மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது சோல்பரி அரசியலமைப்பினை இல்லாதுசெய்து அதனை ஒரு புதிய அரசியலமைப்பின் மூலம் பதிலீடு செய்வதற்கான மக்கள் ஆணையினை வேண்டி நின்றன. அதேவேளை, இந்த ஐக்கிய முன்னணி கூட்டணி தேர்தலின்போது இலங்கையை ஒரு குடியரசாக மாற்றுவதாகவும் வாக்குறுதியளித்தது.

**முடிவுரை**

இலங்கை சமூகத்தில் சோல்பரி அரசியலமைப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கான ஒரு பதிலிறுப்பே 1972ம் ஆண்டு அரசியலமைப்பாகும். அது இலங்கையினுடைய தேசியவாத மற்றும் காலனித்துவ எதிர்ப்பு அரசியலின் ஒரு பகுதியாகவும் காணப்பட்டது. 1970ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற அரசாங்க மாற்றமானது புதிய குடியரசு யாப்பினை தயாரிப்பதனையும் அதனை ஏற்றுக்கொள்வதனையும் சாத்தியமாக்கியது. சிங்கள தேசியவாதிகள் மற்றும் இடதுசாரி சக்திகளின் அரசியல் கூட்டும் இதனை சாத்தியமாக்கியது. 1972ம் ஆண்டு அரசியலமைப்பு அவர்களின் கருத்தியலையே கொண்டிருந்தது.

Department of Examinations

**வினா இலக்கம் 07 :**

**1972 மற்றும் 1978ம் ஆண்டு அரசியலமைப்புக்களின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் அதிகாரங்களை ஒப்பிடுக.**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

1972 மற்றும் 1978 அரசியலமைப்புக்களின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் அதிகாரங்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் ஒப்பீட்டு ரீதியான புரிதலை இவ்வினா மதிப்பிட முற்படுகின்றது. பரீட்சார்த்திகள் தமது விடையின் மூலம் ஒப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு திறனை வெளிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே, இரு அரசியலமைப்புக்களின் கீழும் தாபிக்கப்பட்ட சட்டத்துறைகளின் அதிகாரங்களை மாத்திரம் பட்டியலிடுவது போதுமானதல்ல. அத்தகைய விடைகளுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படக்கூடாது.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- அதிகாரத்தின் அடிப்படையில் இவ்விரு சட்டத்துறைகளினதும் ஒற்றுமைகள்
- இவ்விரு சட்டத்துறைகளினதும் அதிகார வேறுபாடுகள்

**அறிமுகம்**

இவ்விரு அரசியலமைப்புக்களும் சட்டத்துறையின் அதிகாரங்களை வேறுபட்ட கோணங்களில் / பின்புலத்தில் இருந்து வரையறை செய்தன. 1972 அரசியலமைப்பின் கீழ் தேசிய அரசுப்பேரவை மக்கள் இறைமையின் பிரதான கருவியாக காணப்பட்டது. ஆனால் 1978 அரசியல் திட்டத்தின் கீழான சட்டத்துறை மக்கள் இறைமையினை பிரயோகிக்கும் நிறுவனங்களில் ஒன்று மாத்திரமே ஆகும். அதனடிப்படையில் இவ்விரண்டு அரசியலமைப்புக்களும் சட்டத்துறையின் அதிகாரங்களை வரையறுப்பதில் அதனை அணுகுவதில் வேறுபட்ட வழிமுறைகளை கையாண்டுள்ளன.

**கலந்துரையாடல்**

(i) இவ்விரு சட்டத்துறைக்கும் முழு அளவிலான சட்டத்துறை அதிகாரங்கள் உண்டு. ஆயினும்,1978 அரசியல் திட்டம் ஜனாதிபதி முறையினைக் கொண்டிருப்பதினால் ஜனாதிபதிக்கும் சில சட்டத்துறை அதிகாரங்கள் உண்டு. உதாரணமாக, மக்கள் தீர்ப்பு. ஆயினும், 1972ம் ஆண்டு அரசியலமைப்பில் மக்கள் தீர்ப்பு ஏற்பாடுகள் காணப்படவில்லை. 1978ம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதியினை பாராளுமன்றத்தினை விட மேலான அதிகார மையமாக மாற்றியது.

(ii) இவ்விரு அரசியலமைப்புகளும் சட்டத்துறைக்கு முழு அளவிலான சட்டவாக்க அதிகாரத்தினை வழங்கின. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு தேசிய அரசுப் பேரவையின் சட்டத்துறை அதிகாரங்களை இறுதியும் மேலானதுமாக மாற்றியது. சட்டங்களை மீளாய்வு செய்யும் நீதிப்புனராய்வு அதிகாரம் வெளிப்படையாகவே இல்லாது செய்யப்பட்டிருந்து. 1978ம் ஆண்டு அரசியலமைப்பு இத்தத்துவத்தில் ஒரு சிறிய மாற்றத்தினை செய்தது. அதுவே சட்டங்கள் மசோதா வடிவில் இருக்கும்போது அவை பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட முன்னர் நீதிப்புனராய்வுக்கு உட்படுத்த முடியும் என்ற ஏற்பாட்டினை அறிமுகம் செய்தது.

(iii) இவ்விரு சட்டத்துறைகளுக்கும் அரசியலமைப்பில் திருத்தம் செய்ய, மாற்றம் செய்ய மற்றும் புதிய அரசியலமைப்பினை பதிலீடு செய்ய அரசியலமைப்பு ரீதியான அதிகாரங்கள் உண்டு. இவ்விரு அரசியலமைப்பிலும் புதிய அரசியலமைப்பினை சட்டமன்றத்தில் முறையாக பதிலீடு செய்யாமல் அல்லது நிறைவேற்றாமல் முன்னைய அரசியலமைப்பினை இல்லாதொழிப்பது வலிதற்றதாக கருதப்படும். ஆகவே, இரு அரசியலமைப்பின் கீழும், ஒரு வலிதான அரசியலமைப்பு இல்லாத நிலைக்கு நாட்டினை இட்டுச் செல்வதற்கு சட்டத்துறைக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

(iv) அரசியலமைப்பு அதிகாரம் என நோக்கும் போது, 1978ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்துறை அதிகாரங்களில் சில மட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது. இவ்வரசியலமைப்பின் சில ஏற்பாடுகள் “மிகவும்வலிதான ஏற்பாடுகள்” (entrenched provisons) என அழைக்கப்படுகின்றன. இவற்றை மாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதாது. அது மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் அனுமதிக்கப்பட வேண்டும். 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பில் இல்லாத ஒரு ஏற்பாடு 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் காணப்பட்டது. அது யாதெனில், அரசியலமைப்பின் 1,2,3 ஏற்பாடுகள் உள்ளிட்ட 10 ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு அல்லது இல்லாது செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்கள் சம்மதத்தினையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

(v) இவ்விரு சட்டத்துறைகளுக்கும் பொதுநிதி தொடர்பான முழு அளவிலான அதிகாரங்கள் உண்டு.

(vi) இவ்விரு சட்டத்துறைகளினதும் சட்டவாக்க அதிகாரத்தினை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது. காரணம் இவ்விரு அரசியலமைப்பிலும் சட்டங்களை மீளாய்வு (Judicial review) செய்வதற்கான நீதிப்புனராய்வு அதிகாரம் நீதிமன்றத்துக்கு வழங்கப்படவில்லை.

Department of Examinations

**முடிவுரை**

1972 மற்றும் 1978ம் ஆண்டு அரசியலமைப்புக்களின்கீழான சட்டத்துறைகளுக்கிடையில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்விரு முறைகளும் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சித்தாந்தகளுக்கு இணங்க அத்தகைய ஒற்றுமைகள் உருவாகின. ஒரு புறம் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்துறையினை மையப்படுத்தியதாக காணப்பட, மறுபுறமாக 1978ம் ஆண்டு அரசியலமைப்பு நிறைவேற்றுத்துறையினை மையப்படுத்தியதாக அமைந்தது.

**வினா இலக்கம் 08 :**

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புகள் எழுதுக?**

**I. பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறையின் கட்டங்கள்**

**II. மோதல் தவிர்ப்பு மற்றும் மோதல் தீர்வு என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள்**

**III. சர்வதேச அரசியலில் அரசுகள் தேசிய அதிகாரத்தினை பயன்படுத்தும் வழிமுறைகள்**

**IV. ஜனாதிபதித்துவ அரசாங்கமுறை மற்றும் மந்திரிசபை அரசாங்கமுறை என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகள்**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினாக்கள் மேலுள்ள ஒவ்வொரு தலைப்புக்கள் தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டுள்ள விவரண ரீதியான அறிவு மற்றும் ஒப்பீட்டு ரீதியிலான திறன் என்பவற்றை மதிப்பீடு செய்ய முற்படுகின்றது.

Department of Examinations

**8. (i) பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறையின் கட்டங்கள்**

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறை என்றால் என்ன என்பதனை வரையறை செய்தல்
- பொதுக் கொள்கை உருவாக்கத்தின் வேறுபட்ட கட்டங்களை அடையாளம் காணுதல்
- ஒவ்வொரு கட்டத்தினையும் விவரித்தல்

**கலந்துரையாடல்**

I. பொதுக் கொள்கை உருவாக்கம் என்பது ஒருசெயன்முறை. அது ஒரே தடவையில் இடம்பெறும் நிகழ்வல்ல என்பதனைக் குறிப்பிடல் வேண்டும்.

II. பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறை “கொள்கை வாழ்க்கை வட்டம்” எனவும் அழைக்கப்படுகின்றது.

III. பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறை பின்வரும் கட்டங்களைக் கொண்டுள்ளன

(1) கொள்கை முனைப்பு அல்லது நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்

(2) கொள்கை உருவாக்கம்

(3) கொள்கை அமுலாக்கம்

(4) கொள்கை மதிப்பீடு என்பனவாகும்.

IV. கொள்கை முனைப்பு / நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்: கொள்கைப் பிரச்சினைகளை அடையாளம் காணுதல், அவற்றுக்கான வியாக்கியானங்களை வழங்குதல், கொள்கை உருவாக்கத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் மற்றும் மாற்றுக் கொள்கைகளை அடையாளம் காணுதல் என்பன இதில் அடங்கும்.

V. கொள்கை உருவாக்கம்: கொள்கைப் பிரச்சினையொன்று தொடர்பாக அடையாளம் காணப்பட்ட மாற்றுக் கொள்கைகளில் இருந்து சிறந்த கொள்கை ஒன்றினை தெரிவு செய்து அதற்கு கொள்கை வடிவம் கொடுத்தல் மற்றும் அதன் அமுலாக்கத்தினை திட்டமிடுவதனைக் குறிக்கின்றது. பொதுக்கொள்கை உருவாக்கம் என்பது பல்வேறு நிறுவனங்கள், தரப்பினர் / நிபுணர்கள் ஆகியோரை உள்வாங்கி இடம்பெறும் ஒரு செயன்முறை ஆகும்.

VI. கொள்கை அமுலாக்கம்: இது ஒரு நிர்வாகச் செயற்பாடாகும். அரசாங்கத்தினால் தனியாக கொள்கைகளை அமுலாக்க முடியாது. அதற்கு தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு அவசியமாகும்.

VII. கொள்கை மதிப்பீடு: கொள்கையொன்றின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் அடையப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பிடுவதனைக் குறித்து நிற்கின்றது. இது கொள்கைகளைத் தொடர்வதா? இல்லையா? என்பது தொடர்பாக அல்லது கொள்கைகளை மறுசீரமைப்பது அல்லது கொள்கைகளை முடிவுறுத்துவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவுகின்றது. கொள்கை எதிர்பார்ப்புகளை மதிப்பிடுவது அல்லது மீளாய்வு செய்வது என்பனவும் இதில் அடங்கும்.

Department of Examinations

**8. (ii) மோதல் தவிர்ப்பு மற்றும் மோதல் தீர்வு என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு**

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- இரு எண்ணக்கருக்களையும் சுருக்கமாக வரையறுத்தல்
- அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அடையாளம் காணுதல்
- வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குதல்

**கலந்துரையாடல்**

I. மோதல் தவிர்ப்பு மற்றும் மோதல் தீர்வு ஆகியன மோதலை கையாள்வதற்கான இரு அணுகுமுறைகள் ஆகும். ஒவ்வொன்றும் தமக்கேயுரிய நோக்கங்களையும் சவால்களையும் கொண்டுள்ளன.

II. மோதல் தவிர்ப்பு என்பது அழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மோதலொன்று இடம்பெறுவதனை தடுக்க முனைகின்றது. அது மோதல் பரவுவதனை ஆரம்ப கட்டத்தில் மட்டுப்படுத்த முற்படுவதுடன், அதனுடைய எதிர்மறையான விளைவுகளையும் மட்டுப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது.

III. மோதல் தீர்வு என்பது மோதல் மீண்டும் இடம்பெறாத வகையில் தீர்ப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. இது மோதலை முடிவுக்கு கொண்டுவர எத்தனிக்கின்றது.

IV. **வேறுபாடுகள்**

(a) மோதல் தவிர்ப்பு என்பது மோதல் ஒன்று எழுச்சிப்பெறுவதனை, வளர்ச்சியடைவதனை மற்றும் முதிர்ச்சி பெறுவதனை தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், மோதலின் காரணங்களை, மோதல் இடம்பெறும் இடம் மற்றும் மோதலின் பங்குதாரர்களை அடையாளம் காணுதல் போன்ற செயன்முறைகளையும் உள்ளடக்கியது.

(b) மறுபுறமாக, மோதல் தீர்வு என்பது மோதல் ஒன்று நன்கு வளர்ச்சியடைந்து முதிர்ச்சி பெற்றிருக்கும்போது அவசியமாகின்றது. இது பேரம் பேசுதல், மத்தியஸ்தம் செய்தல், மூன்றாம் தரப்பு தலையீடு, சமாதான உடன்படிக்கைகள், உடன்படிக்கைக்கு பின்னரான கொள்கைகள் ஆகிய உத்திகளைக் கொண்டுள்ளது. ஆயினும், மோதல் தவிர்ப்பு இத்தகைய எந்த ஒரு நடவடிக்கையினையும் மேற்கொள்வதில்லை. காரணம், அதனுடைய நோக்கம் மோதல் முதிர்ச்சியடைவதனை தவிர்ப்பதாகும் மற்றும் மோதலுக்கு தற்காலிக தீர்வினை தேடுவதாகும்.

Department of Examinations

**8. (iii) சர்வதேச அரசியலில் அரசுகள் தேசிய அதிகாரத்தினை பிரயோகிக்கும் வழிமுறைகள்**

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- தேசிய அதிகாரத்தினை வரையறை செய்தல்
- சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரத்தினை பிரயோகிக்கும் வேறுபட்ட வழிமுறைகளை அடையாளம் காணுதல்
- அவற்றை உதாரணங்களுடன் விளக்குதல்

**கலந்துரையாடல்**

I தேசிய அதிகாரம் தொடர்பான வரைவிலக்கணம்: மோகன்தோவின் கருத்துப்படி, தேசிய அதிகாரம் என்பது ஏனைய தேசங்கள் எவ்வாறு சிந்திக்க வேண்டும், செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக செல்வாக்கு செலுத்துவதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் தேசமொன்று கொண்டுள்ள இயலுமைமாகும். ஒரு தேசம் மற்றொரு தேசத்தின் மீது தமது விருப்பத்தினை திணிப்பதற்கு கொண்டுள்ள இயலுமை எனவும் அழைக்கப்படுகிறது.

II அரசுகள் மற்றைய அரசுகள் மீது தமது விருப்பத்தினை திணிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைக் கொண்டுள்ளன. (a) அழுத்தத்தினை பிரயோகித்தல் (b) வெகுமதி வழங்குதல் (c) தண்டனை (d) இராணுவப்படை பிரயோகம்

III அழுத்தத்தைப் பிரயோகித்தல்: இது பொதுவில் ஏனைய அரசுகளை அல்லது அரசுகளுடன் கலந்துரையாடல், வாதிடல் மூலம் சமரசம் செய்தல் அல்லது பிரச்சனைகளை மீள வரையறை செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியது.

IV வெகுமதி வழங்குதல்: இது பொருளாதார உதவி, அரசியல் ஆதரவு வழங்குதல், இராணுவ உதவி மற்றும் பொருள்சார் ஊக்குவிப்புகளைக் குறித்து நிற்கின்றது.

V தண்டனை: – பலமான அரசுகள் ஏனைய அரசுகளைக் கட்டுப்படுத்த மற்றும் தமது நலன்களை அடைந்துக்கொள்வதற்காக தண்டனையினை ஒரு கருவியாக பயன்படுத்துவதனை இது குறித்து நிற்கின்றது. பலமான அரசுகள் தண்டனை எனும் அச்சுறுத்தலை ஏனைய அரசுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்றன. இது வெகுமதிகளை முடிவுக்குக் கொண்டுவருதல் மற்றும் ஏனைய நாடுகளை சில எதிர்மறையான விளைவுகளை சந்திக்கச் செய்தல் என்பவற்றை குறித்து நிற்கிறது. குறிப்பாக, பிரசாரம் செய்தல், பிற நாடுகளைத் தூண்டும் செயற்பாடுகள், ஏனைய நாடுகளுக்கு ஆதரவளித்தல் ஆகியன ஏனைய தேசங்களை பழிவாங்கும் வகையில் கையாளப்படும் வெளிப்படையான பொறிமுறைகளாகும்.

VI படைகளைப் பயன்படுத்தல்: இது வன்முறை நோக்கில் பலமான படைகளைப் பயன்படுத்துவதனைக் குறித்து நிற்கின்றது. இது யுத்தம் மற்றும் வலிந்து தாக்குதல் நடாத்துதல் என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

Department of Examinations

**8. (iv) மந்திரிசபை அரசாங்க முறை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்கமுறை என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள்**

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

- இரண்டு முறைகளையும் சுருக்கமாக விவரித்தல்
- இரண்டு முறைகளுக்குமிடையிலான வேறுபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை விளக்குதல்

**கலந்துரையாடல்**

I கபினட் அரசாங்க முறை எப்போதும் பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியிலான அரசாங்க முறையுடன் ஒப்பிடப்படுகின்றது. மறுபுறமாக, இரு மரபினை அடிப்படையாகக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி அரசாங்க முறை காணப்படுகின்றது. அவை அமெரிக்க மற்றும் பிரான்சிய மாதிரிகளாகும். இவ்விரு முறைகளிலும் பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன

II ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் பிரதான குணாம்சம் யாதெனில் நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் அதிகாரப் பிரிவினை காணப்படுவதாகும். இங்கு சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை ஆகியன வேறுபட்ட தோற்றம் மற்றும் இருப்பினைக் கொண்டிருப்பதாகும். ஆனால், மந்திரிசபை முறையில், அதாவது பாராளுமன்ற மாதிரியினை அடிப்படையாக கொண்ட முறையில் நிறைவேற்றுத்துறை சட்டத்துறையில் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றது. ஆகையால், அவை ஒத்த தோற்றுவாயினைக் கொண்டுள்ளன.

III பிரான்சிய மரபினைக் கொண்ட ஜனாதிபதித்துவ முறையில் சட்டத்துறையினைவிட நிறைவேற்றுத்துறை பலமானது. அமெரிக்க முறையில், நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் தடைகள் மற்றும் சமன்பாடுகளுடன் கூடிய இறுக்கமான அதிகாரப் பிரிவினை காணப்படும். பிரான்சிய முறையிலும் கூட நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் அதிகாரப் பிரிவினை காணப்படுகின்றது. ஆனால் நிறைவேற்றுத்துறைக்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி சட்டத்துறையினை விட அதிகாரமிக்கவராக காணப்படுகின்றார்.

IV ஜனாதிபதித்துவ முறையில் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்குமிடையில் அதிகாரப்பிரிவினை மூலதத்துவங்கள் மிக இறுக்கமாக பின்பற்றப்படும். மந்திரிசபை அரசாங்க முறையில் அத்தகைய அதிகார பிரிவினை ஏற்பாடுகள் காணப்படுவதில்லை. அங்கு நிறைவேற்றுத்துறை சட்டத்துறையின் ஒரு பகுதியாகக் காணப்படும்.

V ஜனாதிபதித்துவ முறையில் நிறைவேற்றுத்துறை சட்டத்துறையில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்கும். அங்கு பொறுப்புக்கூறும் பொறிமுறை பாராளுமன்ற முறையில் இருந்து வேறுபட்டதாக காணப்படும்.

VI ஜனாதிபதித்துவ முறையில் நிறைவேற்றுத்துறையின் உறுப்பினர்கள் சட்டத்துறையின் உறுப்பினர்கள் அல்ல. ஆனால் கபினட் முறையில் அரசியல் நிறைவேற்றுத்துறையின் உறுப்பினர்கள் சட்டத்துறை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர்.

VII கபினட் அரசாங்க முறையில், பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக காணப்படுவார். சில ஜனாதிபதித்துவ முறைகளில், பிரதமர் பதவி காணப்படுவதில்லை. ஜனாதிபதியே அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறையின் தலைவராக காணப்படுவார். இது அமெரிக்காவில் காணப்படுகின்ற முறையாகும்.

VIII ஜனாதிபதித்துவ அரசாங்கமுறையில், ஜனாதிபதி அரசின் தலைவர் என்றவகையில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவார். கபினட் அரசாங்க முறையில், அரசின் தலைவர் ஒன்றில் பிரித்தானியாவைப்போன்று மரபுரிமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார் அல்லது ஏனைய கபினட் முறைகளைப் போன்று நியமிக்கப்படுவார்.

❋❋❋❋❋

Department of Examinations